பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 24 ஞாயிற்றுக்கிழமை (08-07-2001) தொலைபேசி: 3378 ஒலி: 209

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
**அர்ச்சனா ஜுவலர்ஸ்**
118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-2127]

## நம்பிக்கை இல்லாப் பிரேரணை

# பணபலத்தால் அரசைக் கவிழ்க்க

# ஐக்கிய தேசியக் கட்சி சதித்திட்டம்!

## அமைச்சர் மங்கள சமரவீர சாடல்

(நமது நிருபர்)

நாட்டில் உள்ள சில நாசகார சக்திகள், பணப் பலத்தினைக் கொண்டு ஜனநாயக முறைப்படி மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு எடுத்துவரும் முயற்சிகள் ஒருபோதும் வெற்றி பெறப் போவதில்லை.

எனவே நம்பிக்கையில்லாப் பிரேரணைவிடயத்தில் அரசுநிச்சயம்வெற்றி பெற்றேதிரும்.

இவ்வாறு அமைச்சர் மங்கள சமரவீரா அரசு மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவரும் நாசகார சக்திகளை சாடியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான எஸ்.பி திஸநாயக்கா கட்சியிலிருந்து வெளியேற்றப்படவுள்ளார் என்பது ஐக்கிய தேசியக்கட்சி செய்துவரும் பொய்ப்பிரசாரத்தில் எந்தவிதமான உண்மையுமில்லை என அமைச்சர் மங்கள சமரவீரா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அமைச்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஹோட்டலில் உணவு உண்ட 100 டாக்டர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதி

[கொழும்பு]

அரச மருத்துவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்ட இராப்போசன விருந்தில் கலந்து கொண்ட டாக்டர்களில் இரவு உணவை உண்ட 100 பேர் கொழும்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

சுகாதார முறைப்படி தயாரிக்கப்படாத உணவை உண்டதாலேயே டாக்டர்கள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் 10பேர் விடுதியில் தங்கி சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இதேவேளை மேற்படி உணவைத் தயாரித்து வழங்கிய 'மவுண்ட்லவினியா' ஹோட்டல் கொழும்பு மாநகர சபை பிரதம வைத்திய அதிகாரி டாக்டர் பீரிஸ் சினால் சீல்வைத்து மூடப் பட்டது.

அக ஹோட்டல் உணவைப் பரிசோதித்த போது மலத்தில் காணப்படும் நுண்ணங்கிகள் காணப்பட்டதாகவும். ஐஸ் கிறீம் வெண்ணெய் மற்றும் மீன் போன்றவை ஒரு குளிர் சாதனப்பெட்டியில் வைக்கப் பட்டிருந்ததாகவும். எலிகளும் கரப் பொத்தான் பூச்சிகளும் ஹோட்டலில் தாராளமாக இருந்ததாகவும் டாக்டர் பீரிஸ் தெரிவித்தார். (இ)

## முக்கிய வீதிகள் - பிரதேசங்கள் உயர்பாதுகாப்புவலயமாகபிரகடனம்

(கொழும்பு)

கொழும்பில் முக்கிய பல வீதிகள் மற்றும் பிரதேசங்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினால் அதி உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

1979ம் ஆண்டு 48ம் இலக்க பயங்கரவாத தடுப்புச்சட்டம், அவசரகால பாதுகாப்பு வலய பிரகடனச்சட்டம் ஆகியவற்றுக்கு அமைவாக வெள்ளவத்தை தப்பாலம், வைத்தியசாலை வீதி, ஸ்ரீ சரணங்கர வீதி, பாமன்கடை வீதி, ஸ்ரபட்வீதி, கைலெவல் வீதி, ஹெரலப்பன்ன, அல்பிட்டிகல மாவத்தை, கனத்தை சுற்றுவட்டம், டி.எஸ். சேனநாயக்க வீதி, பிரதிப்ப வீதி. மருதானை வீதி தொழில்நுட்ப கல்லூரிச்சந்தி. ஏலகட் வீதி.

[8-ம் பக்கம் பார்க்க]

## சிப்பாய் பலி

நெல்லியடிச் சந்தைப்பகுதியில் கடந்தவியாழனன்று இடம் பெற்ற கைக்குண்டு வீச்சில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளதாகவிசேட ஊடகத்தகவல் நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (ந-9)

## மாணவன் திவ்வியன் கைது

## யாழ். பல்கலைக் கழகம் 4வது நாளாக செயலிழப்பு

(யாழ்ப்பாணம்]

படையினரால் கைது செய்யப்பட்டு யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீடமாணவன் கிருஷ்ணசாமி திவ்வியன விடுதலை செய்யப் படாதனதயடுத்து நேற்று நான்காவது

[8 ஆம் பக்கம்பார்க்க]

## தொடர்ந்தும் தடுத்துவைபபு

கொழும்பில் நேற்று முந்தினம் இரவு மேற்கொள்ளப் பட்டசுற்றிவளைப்பு தேடுதல்களின்போது கைது செய்யப் பட்ட நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர் யுவதிகளில் பெரும்பாலானோர் விசாரணைகளின்பின் விடுதலை செய்யப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் கைது செய்யப் பட்டவர்களில் வடக்குக்கிழக்கை சேர்ந்த 10பேர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுளளனர். என்றும் அவர்கள் விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் என பொலிஸார்சந்தேகிப்பதாவும்கொழும்பு மத்தியசிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகா கூறியுள்ளார். (ந-8)

## முக்கிய அமைச்சர்களில் ஜனாதிபதிக்கு சந்தேகம்

### கண்காணிப்பு தீவிரம்

[கொழும்பு]

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசிலிருக்கும் சில முக்கிய அமைச்சர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ளலாமென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சந்தேகம் கொண்டுள்ளதாகவும இதனால் இத்தகைய கட்சிதாவும் அமைச்சர்களைக் கண்காணிக்கும் படிபுலனாய்வுப் பிரிவுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளதாகவும் கொழும்பிலிருந்து வெளிவரும் ''ராவய'' பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

பாராளுமன்ற விவகார சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி.

(8-ம் பக்கம் பார்க்க)

## திவ்வியனை விடுவிக்க துணைவேந்தர் தலைமையில் நால்வர் கொண்ட குழு

[யாழ்ப்பாணம்]

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவனும் மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் செயலாளருமான கிருஷ்ணசாமி திவ்வியனின் விடுதலை தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கையெடுப்பதற்கு நால்வர் அடங்கிய குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக பேரவையின் கூட்டம் நேற்றுக் காலை பல்கலைக்கழகதுணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையின் தலைமையில் நடைபெற்ற

(8-ம் பக்கம் பார்க்க)

## புதிய அரசியல் யாப்பை அமைத்து நிறைவேற்று அதிகாரத்தைஒழிக்குக

### கலாநிதி விக்கிரபாகு கருணாரட்ன

(கொழும்பு)

'ஜனநாயக ரீதியாக மக்களால தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கமொன்று புதிய அரசியலமைப்பை அங்கீகரிப்பதற்கு சமாதானத்தை விரும்பும் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்

இவ்வாறு கலாநிதிவிக்கிரமபாகுகருணரத்தின தெரிவித்துள்ளார்.

பொது ஜன ஐக்கிய முன்னணியின் தற்போதையநிலை தொடர்பாக அவர்கருத்து வெளியிடுகையில்

தற்போது பொதுஜன ஐக்கியமுன்னணிஅரசு மககளால ஜனநாயகமுறைப்படி தெரிவு செய்யப்பட்டு மக்கள் ஆணையைப்பெற்றுள்ளது.

அரசாங்கம் தனது பலத்தை உறுதி செய்து கொண்டு பாராளுமன்றத்திற்கு வெளியே அரசியல் யாப்பை தயாரிக்கக்கூடிய ஒரு அமைப்பை உருவாக்கவேண்டும். அந்த அரசியல்யாப்பின்நிறைவேற்று அதிகாரம்கொண்ட

[8 ஆம் பக்கம் பார்க்க]

## விமான நிலையத்தில் இரு தமிழ்இளைஞர்கைது

(கொழும்பு)

பதினான்கு வருடங்கள் நோர்வேயில் தங்கியிருந்துவிட்டு இலங்கை வந்த தமிழர் ஒருவரும் அவருடன் உதவியாக சென்றவரும் நோர்வே திரும்புவதற்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் பணச்சீட்டு பெறச் சென்ற வேளை

[8 ஆம் பக்கம் பார்க்க]

## வன்னிக்கு உணவுப்பொருள்

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களான கிளிநொச்சி முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்கு கடந்த வாரம் 28 லொறிகளில் உணவு மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்கள் அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ந-9)

## 12வது நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கம் யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் வெ. யோகேஸ்வரன் ஆகியோரின் 12வது நினைவு தின நிகழ்வு எதிர் வரும் வெள்ளிக்கிழமை 13ஆம்திகதி மு.ப. 10.00 மணியளவில தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ். தலைமைச் செயலகத்தில் நடை பெறவுள்ளது. (உ)

## தேவாலயம் புனரமைப்பு

(புலோலி)

வடமராட்சி கிழக்கில் உள்ள மணற்காடு சென். அந்தோனியார் தேவாலயம் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதி பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (உ-52)

## பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம

(யாழ்ப்பாணம்)

இவ்வருடம் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர) பரீட்சைக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பப்படிவங்கள்இம் மாதம 31 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். (உ-3)

## திடீர் இடமாற்றம்

(புலோலி

மேலைப் புலோலி சைவப் பிரகார வித்தியாலய அதிபர் பளை சைவப்பிரகாச மகா வித்தியாலயத்திற்கு கல்வித் திணைக்களத்தினால் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் (உ-52)

## பெயர்ப் பலகை மீது தார்ப்பூச்சு

(சல்வயல)

ஏழாலை மக்கள் நலன் கருதி அப்பகுதியில் அமைக்கப்பட்ட மக்கள் சந்தையின் பெயர்ப் பலகைக்கு தார்பூசி சிலர் விஷமத்தனம புரிந்துள்ளனர்.

இச் சந்தையை இயங்க விடாது தடுப்பதில் ஆர்வம் கொண்ட சிலரே இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிய வந்துள்ளது. (உ-111)

## தீமூட்டி மரணம்

[யாழ்ப்பாணம்]

தனக்குத் தானே தீமூட்டி ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பெண் நேற்று முன்தினம் அங்கு மரணமானார்

யாழ். மகதியூஸ் வீதியைச் சேர்ந்த திசநதனி (வயது 38) என்பவரே இவ்வாறு மரணமானவர் ஆவார்.

[உ-104]

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஜூன மாதம் 28 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகிறது

| | |
|---|---|
| 193456 பி | 193456 சி |
| 193456 டி | 193456 ஈ |
| 193456 எப் | 194345 ஏ |
| 195155 ஏ | 195192 ஏ |
| 195 29 ஏ | 195235 ஏ |
| 195249 ஏ | 195249 பி |
| 195249 சி | 195259 ஏ |
| 195259 பி | 195261 ஏ |
| 195261 பி | 195261 சி |
| 195263 பி | 195263 பி |
| 195263 சி | 196273 ஏ |
| 195286 ஏ | 195290 ஏ |
| 195290 | 195290 சி |
| 195317 ஏ | 195317 பி |
| 195342 ஏ | 195342 பி |
| 195352 ஏ | 195352 பி |
| 195349 ஏ | 195376 ஏ |
| 195388 ஏ | 195400 ஏ |
| 195404 ஏ | 195420 ஏ |
| 195420 பி | 195420 சி |
| 195423 பி | 195423 சி |
| 195424 ஏ | 195458 ஏ |
| 195461 ஏ | 195462 ஏ |
| 195462 பி | 165464 ஏ |
| 195468 ஏ | 195468 பி |
| 194468 சி | 195468 டி |
| 195499 ஏ | 195509 ஏ |
| 195329 பி | 195334 ஏ |
| 195338 ஏ | 195340 ஏ |
| 195340 பி | 195341 ஏ |
| 195347 ஏ | 195347 பி |
| 195360 ஏ | 195374 ஏ |
| 195374 பி | 195382 ஏ |
| 195382 பி | 195385 ஏ |
| 195393 ஏ | 195408 ஏ |
| 195413 ஏ | 195417 ஏ |
| 195424 ஏ | 195424 பி |
| 195424 சி | 195425 ஏ |
| 195425 பி | 195425 சி |
| 195425 டி | 195425 ஈ |
| 195425 எப் | 195425 ஜி |
| 195437 ஏ | 195437 பி |
| 195437 சி | 195437 எப் |
| 195437 ஜி | 195442 ஏ |
| 195443 பி | 195443 சி |
| 195443 டி | 195451 ஏ |
| 195451 பி | 195451 சி |
| 195451 டி | 195451 ஈ |
| 195451 எப் | 195451 ஜி |
| 195451 எப் | 195451 ஜே |
| 195451 கே | 105451 எல் |
| 195451 எம் | 195451 என் |

ஜூன் மாதம் 29 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப்பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன,

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 170999 ஏ | 186251 ஏ |
| 186251 பி | 188866 ஏ |
| 189165 ஏ | 189616 ஏ |
| 189616 பி | 189616 சி |
| 189701 ஏ | 189703 ஏ |
| 189704 ஏ | 189708 ஏ |
| 189713 ஏ | 189714 ஏ |
| 190767 ஏ | 190703 ஏ |
| 190803 பி | 191015 ஏ |
| 191229 ஏ | 191229 பி |
| 191229 சி | 191964 ஏ |
| 193045 ஏ | 193 46 ஏ |
| 193050 ஏ | 193251 ஏ |
| 193494 ஏ | 193494 பி |
| 194406 ஏ | 194406 பி |
| 196152 ஏ | 195185 ஏ |
| 195185 பி | 195190 ஏ |
| 195220 ஏ | 195220 பி |
| 195220 சி | 196238 ஏ |
| 195268 ஏ | 1953 9 ஏ |

(தொடரும்)

## சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட கொக்குவில் இந்து மயானம் மேற்படி பிரதேச சபை ஊழியர்கள் மற்றும் இப்பகுதி சனசமூக நிலைய உறுப்பினர்களால் நேற்றும் இன்றும் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டு வருகிறது.

அச்சிரமதான நிகழ்வில் இப்பகுதிப் பொதுமக்களையும் கலந்து கொண்டு ஒத்துழைப்பு நலகுமாறு நல்லூர் பிரதேசசபைத் தலைவர் மணிபல்லவராஜன் அறிவித்துள்ளார். (உ)

## விஷு புத்தாண்டில்

[7ம பக்கத் தொடர்ச்சி]

குறைவு போன்றவை அமையும்.

### உத்தியோகத்தர்களுக்கு

ஜூன் 13 வரை தொழில் வருமான நன்மையும். பின்னர் இடமாறுதல் அலைச்சல் மத்திம சுகம் விளங்கும்.

### வியாபாரிகளுக்கு

ஜூன் 13 வரை வியாபார முன்னேற்றம், லாபச் சிறப்பும், பின்னர் மத்திமமான பலன்களால் படிப்படியாக விருத்திகள் கிடைக்கும்.

### மாணவர்களுக்கு

ஜூன் 13 வரை கல்வி தேர்வு லாபமும், பின்னர் கல்வி முயற்சிகளில் அலைச்சல் பின்னர் ஊக்கம் தோன்றி நன்மை அமையும்;

### இளைஞர் யுவதிகளுக்கு

ஜூன, 13 வரை தொழில் வருமான லாபம். சகோதர வகை உதவி வெளி நாட்டுப் பயண வெற்றி சிலருக்கு விவாக நன்மை கிடைக்கும். பின்னர் அலைச்சல், அதிக செலவுடன் பயணம் விவாகச் சிறப்பு வீடு, வாகன சுகம் ஏற்படும்;

### தொழிலாளர்களுக்கு

ஜூன மாதம வரை அதிக மானலாபமும், பின்னர் முயற்சியினால் அலைச்சல், முன்னேற்ற லாபம் உள்ளது;

### முதியோர்களுக்கு

ஜூன் 13 வரை நோய்ச் சிரமம் இராது, பின்னர் தேகசுக விருத்திலாபமும் சந்தோஷமும் இருந்து வரும் சிலருககு சளி இருமல்தோன்றி குணமாகி விடும்.

(தொடரும்)

## மின்சார ஒளியெங்கே?

இருளும் கண் திறந்தது
யாழுக்கு வெளிச்சமென்று
சிலவேளை சாரம் போகும்
சிலவேளை மின் போகும்

மினுக்கென்று சிலவேளை
சிணுங்கிப் பேசும்
படீடென்று பலவேளை
மறைந்து போகும்.

சிட்டென்று மறைந்த மின்
சட்டென்று வரும்.
பட்டென்று சிலவேளை
(சோற்று) தட்டும் விழும்.

பில மட்டும் இருநூறை
தாண்டிப் போகும்.
பல்ப் ஒன்று விலையும்
அறுபது போகும்.

வடலியூரான்

சகு இ 106

# சங்கே முழங்கு

## பெருமதிப்பார் திருமுறைக்கு அவமதிப்பா?

தமிழகத்தில் பிறமதங்களின் தோற்றத்தால்சைவத்தின் வளர்ச்சி குன்றியது வேதம் ஓதும் வேதியர் பலரிருந்தும் ஏன் தில்லை மூவாயிரம் அந்தணர் இருந்தும் அவர்களது வேதத்தால் சைவசமயமே மெய்ச்சமயம் என்று நிலை நாட்ட முடியவில்லை மாறாக அவனுரையே ''தமதுரையாகக்'' கொண்டு திருமுறை பாடிய நாயன்மார்களாலேயே சைவத்தை நிலை நாட்ட முடிந்தது அண்மைக் காலங்களில் இத்தகைய பெருமைக்குரிய திருமுறைகள் சில அந்தணர்களால் அவமதிப்புக்குள்ளாகி வருவது யாவரும் அறிந்ததே.

முற்படி ஆலயங்களில் ஆசீர்வாதத்தின் பின் தேவாரம் ஓதும் முறையைத் திட்டமிட்டுப் புகுத்தினர். பல கும்பாபிஷேக விஞ்ஞாபனங்களை நோக்கின் திருமுறைக்கு இடமில்லை. (உதாரணம்) 02-07-2001இல் நடைபெற்ற புளியங்கூடல் இந்தன் ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய கும்பாபிஷேக விஞ்ஞாபனத்தில் கிரியா நிகழ்ச்சி நிரலில் ராக, தாள, கீத, வேதஸ்தோத்திரங்களைக்குறிப்பிட்டுள்ளார்கள். திருமுறைப் பாராயணம் இல்லை. ஆனால் 13-06-2001இல் குப்பிளான் கற்கரை விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற கும்பாபிஷேகத்து விஞ்ஞாபனத்தில் கிரியா கால நிகழ்ச்சி நிரலில் பன்னிரு திருமுறைப் பாராயணம் வேத ஸ்தோத்திரத்தைத் தொடர்ந்து இடம் பெறுமென்று குறிப்பிட்டு இருந்தது. அப்பணியைச் செய்ய முறைப்படி கற்று முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக பல கும்பாபிஷேக நிகழ்வுகளில் ஓதி வரும் ஓதுவார் ஒருவரும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தார்.

ஆனால் அங்கு நடந்ததோ அந்தணர் என்று சொல்லப் படுவோரின் வேத, கீத, ராக, தாள விளையாட்டுக்கள், அவை முடிந்தபின் நிகழ்ச்சி ஒழுங்கின்படி பன்னிரு திருமுறை ஓதல், ஓதுவார் பக்தியுடன் ஓதி நாலாம் திருமுறைக்கு வந்தவுடன் திடீரென இத்துடன் நிறுத்தி திருவாசகம், திருவிசைப்பாபோன்றவற்றை ஓதி உடன் முடிக்குமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டது கூறப்பட்ட காரணம் நேரம் போதவில்லையென்று குருக்களாக நின்றவர்கள் விடுத்த உத்தரவு தான்.

''கஜவதனா கருணா சதனா'' என்ற கீர்த்தனையை ஆலாபனைப்பண்ணிப்பாடி, நாதஸ்வரத்தில் 'நாட்டை' பின் ''ஹம்சத்வனி'' போன்றவற்றை வாசிக்க வைத்து, மேளத்தில் ''சம்போ சிவசம்போ'' என்ற பின்னணியில் ''ஜதி'' சொல்லச் சொல்ல அதை வாசிக்க வைத்து, இப்படியான வேத, கீத, நாத தாள விளையாட்டுக்களை நிகழ்த்தும்போது போகாத நேரம், திருமுறையை முறைப்படி ஓதும் போது போய் விட்டது என்று நிறுத்தச் சொல் தவறை அந்த ''அந்தண சிரேஷ்டர்'' களுக்கு உரியவர்கள் உணர்த்தாது விட்டமை மிகவும் வருத்தப்படவும், வெட்கப்படவும் வேண்டிய ஒரு செயலாகும்.

இதைவிட சைவசமயிகள் எல்லோரும் வெட்கப்பட வேண்டியது ''தேவாரம் வேதசாரம்'' என்ற நூலை ஆக்கிய ''காசிவாசி'' செந்திநாதையரும், இலங்கையிலும் இந்தியாவிலும் தனிகரற்ற புகழுடன் திருமுறைப் பணிகளை ஆற்றிய ''இசைவல்லார்'' செல்லத்துரை அவர்களும் உலவிய குப்பிளான் மண்ணில் இச்சம்பவம் நிகழ்ந்ததற்கேயாகும்.

கும்பாபிஷேகக் கிரியைகளில் ஒன்று கதவு திறக்கத் திருமுறை ஓதல் ஆகும். அதில் பதினொரு பாடல்களும் ஓதப்படுவது மரபு. இங்கு நேரம் போதாத காரணத்தைக் காட்டி ஒருபாட்டுடன் நிறுத்த வேண்டுமென்று உத்தரவு வழங்கப்பட்டது எனினும் அந்த இடத்தில் நின்ற அகில இலங்கைத் திருமுறை மன்றத் தலைவரின் எதிர்ப்பால் ஏற்பட்ட மௌனத்தை அனுசரணையாகக் கொண்டு பாடல் தொடர்ந்து ஓதப்படுக் கொண்டிருந்தது. சினம் கொண்ட அந்தணர் மூன்றாவது பாடல் ஓதப்பட்டுக் கொண்டிருக்கும் போது மணியை அடித்துக கதவையும் திறந்து விட்டு வெளியில் ஆசியுரைக் கூட்டம் நடாத்தப் போய் விட்டார்.

''அப்பரே'' பதினொரு பாடல் பாடிய பின்பு தான் கதவு திறந்தது என்பதை இந்த ''அந்தணர்'' உணரவில்லைப் போலும். இந்நிகழ்வால் எதிர்காலத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற இருக்கும் நிகழ்வை முன் கூட்டியே கட்டியம் கூறுவது போல் பதினொரு பாடலும் பாடி முடிந்தபின் தீபங்காட்ட வேண்டியவர்கள் வெளிப் பிரகாரத்தில் ஆர்ப்பாட்டமாக ஆசியுரை, பாராட்டுரை, நடத்திக் கொண்டிருக்க சந்நிதியுள் இருந்த பொது மக்கள் படிக்கட்டில் கற்பூரம் கொளுத்தி விட்டு வெளியேறியதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது;

இப்படியான சம்பவம் இனிமேலும் நடைபெறாமல் சைவ சமயிகள் இனியாவது விழிப்புடன் செயற்பட வேண்டும் மன்றங்கள், ஆதீனங்கள், மடங்கள், பேரவைகள் யாவற்றிற்கும் இது சமர்ப்பணம்; ''திருமுறையைப் பெருமறையாகப் போற்றும் அந்தணப் பெருமக்கள் மன்னிப்பார்களாக,

திருமுறைப் பிரியன்


## பரந்தாமன் றேடேர்ஸ்

எமது சேவைகளாக கட்டிடப் பொருட்கள், மரத்தளபாடங்கள், கொங்கிறீற் கற்கள், மரப்பலகை தீராந்தி வகைகள் விற்பனை செய்தலும், தொலைத் தொடர்பு சேவை, போக்குவரத்து சேவை என்பனவும் நடைபெறுகின்றன. அனைத்து தேவைகளையும் எந்நேரமும் பெற்று நிறைவு செய்யலாம்.

பரந்தாமன் றேடேர்ஸ்
2ம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.
தொலைபேசி இலக்கம: 070-212907

[2187]


# பரு பிரதேசத்தில் சனசமூக நிலையங்கள் ஐந்து புனரமைப்பு

(புலோலி)

பருத்தித்துறை பிரதேசத்திலுள்ள ஐந்து சனசமூக நிலையங்களின அபிவிருததிக்கென, பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து நாலரை இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

கெருடாவில் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சனசமூக நிலையம், குடத்தனை பொற்பதிசமூக நிலையம் ஆகியனவற்றின் புனரமைப்புக்கென 3 இலட்சம் ரூபாவும், ஊறணி காந்திசனசமூக நிலையத்திற்கும்பொலிகண்டி சனசமூக நிலையத்திற்கும் நூல்கள் கொள்வனவிற்கும் 75ஆயிரம்ரூபாவும், வல்வெட்டித்துறை கொம்மாந்துறை சன சமூக நிலைய தளபாடக் கொள்வனவுக்கு 75 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (உ-52)

★ நேற்று முன் தினம் அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தாலுக்கு

# ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கு

# ஏற்பாட்டாளர்கள் நன்றி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரச படைகள் தமிழ்ப் பெண்கள் மீது புரிந்து வரும் பாலியல் வல்லுறவுகள், சித்திரவதைகளுக்குக் கண்டனம் தெரிவித்து நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஹர்த்தாலுக்கு ஒத்துழைப்பு வழங்கிய சகல மக்களுக்கும் 11 தமிழ் முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

இன ஒற்றுமையை பிரதிபலித்தும், மனித உரிமை மீறல்களை குறிப்பாக பாலியல் வன்முறைகளைக் கண்டித்தும் அமைதியான முறையில், அகிம்சை வழியில் பூரண ஹர்த்தால் அனுஷ்டித்து தங்களது உணர்வுகளையும் எதிர்ப்பையும் இலங்கை அரசுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் வெளிக்காட்டிய அனைத்து மக்களுக்கும்.

மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம், யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், யாழ் கத்தோலிக்க மறை மாவட்டக்குழு, யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம், தமிழர் ஆசிரியர் சங்கம், வணிகர் கழகங்கள், பாடசாலை மாணவர்கள், தனியார் வங்கி நிறுவனங்கள், சிற்றூர்திச்சேவை உரிமையாளர்கள், வாகன உரிமையாளர்கள், பத்திரிகை நிறுவனங்கள், கூட்டுத்தாபன தனியார் கூட்டுறவு ஊழியர்கள், கூட்டுறவு அமைப்புகள், பொது அமைப்புகள் ஆகியவற்றுக்கு 11 தமிழ் முஸ்லிம் கட்சிகளின் சார்பில நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி ஹர்த்தால் நிகழ்வுக்கு ஆதரவு வழங்கிய பொதுமக்களுக்கு யாழ் கத்தோலிக்க மறைமாவட்ட நீதி, சமாதான ஆணைக்குழு யாழ். மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் என்பனவும் நன்றி தெரிவித்துள்ளன. (உ-8)

## குடத்தனைப் பகுதியில் 3பாடசாலைகள்புனரமைப்பு

(புலோலி)

வடமராட்சி கிழக்கு குடத்தனைப்பகுதியிலுள்ள மூன்று பாடசாலைகளில் 6 இலட்சம் ரூபா செலவில் புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

குடத்தனை அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை, குடத்தனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, மணல்காடு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை ஆகிய மூன்று பாடசாலைகளுமே தலா இரண்டு இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன. [உ-52]

## இளைஞர்களின்சடலங்கள் புலிகளிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை மற்றும் நவாலிப் பகுதிகளில் அண்மையில் இடம் பெற்ற சம்பவங்களில் உயிரிழந்ததாகத் தெரிவித்து யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்த இரு சடலங்களும் நேற்று முன் தினம் செஞ்சிலுவைச் சர்வதேச குழுவினால் பள்ளிக்குடாவில் வைத்து விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

யாழ். போதனா வைத்திய சாலையில் இருந்து சடலங்களை இராணுவத்தினர் பொறுப்பேற்று குருநகர் இறங்கு துறையில் வைத்து செஞ்சிலுவை சர்வ தேசக் குழுப பிரதிநிதிகளிடம் ஒப்படைத்தனர்.

பின்னர் செஞ்சிலுவைக் குழுப்பிரதிநிதிகள் குடாக்கடலேரி ஊடாகபடகுகளில் சடலங்களை எடுத்துச் சென்று பள்ளிக்குடாவில் விடுதலைப் புலிகளிடம் கையளித்தனர். (உ-69)

## 600 பேர் வன்னி சென்றனர்

வவுனியாவில் நேற்று முன் தினம் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டபோது இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் இருந்து சுமார் 700 பேர் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளும் இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியில் இருந்து 600 பேர் வன்னிக்கும் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஹர்த்தாலின் போது அசம்பாவிதங்கள் நடைபெற்றதாகத் தெரியவரவில்லை. (ம)

## சிறந்த தமிழ் நூல்கள் பரிசுத் தேர்வுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

2000 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரை வெளிவந்த நூல்களின் ஆசிரியர்களிடமிருந்து சிறந்த தமிழ் நூல்கள் பரிசுத் தேர்வுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதாக கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக் கொள்ளலாம் அல்லது சுய முகவரியிட்ட தபாலுறையை செயலாளர், தமிழ்இலக்கியக் குழு கலாசாரஅலுவல்கள் திணைக்களம், 8ஆவது மாடி. செத்திரிபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுத் தேர்வில் பங்கு கொள்ள விரும்பும் நூலாசிரியர்கள் இலங்கையராக இருத்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் நூலின் 5 பிரதிகளை நேரில் கையளிக்கலாம் அல்லது அஞ்சல் மூலம் அனுப்பிவைக்கலாம.

விண்ணப்பங்களுடன் நூல்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித்தினம் இம்மாதம் 30 ஆம் திகதி எனவும் திணைக்களம் அறிவித்துள்ளது (செ)

## விளையாட்டு விழா

தும்பளை மேற்கு சிக்கன கடனுதவு கூட்டுறவு மாதர் சங்க பாரதி பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டு விழா பாடசாலை மைதானத்தில் ரீ தேவராஜா தலைமையில் இன்று நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் முன்னாள் அதிபர் எஸ். தங்கராஜா பிரதம விருந்தினராகவும், முன்னாள் கணிதஆசிரிய ஆலோசகர் எஸ். சிவஞானசுந்தரம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-52)

* * *

(புலோலி)

கரவெட்டியிலுள்ள துன்னாலை வசந்தம் பாலர்பாடசாலையின் விளையாட்டு விழா துன்னாலை தாமரைக்குள மைதானத்தில், துன்னாலை மகளிர் சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச்சங்கத் தலைவி: பண்டிதை திருமதி பீ. வல்லிபுரம தலைமையில் நேற்று நடைபெற்றது. [உ-52]

## தேசிய பாசறை

(யாழ்ப்பாணம்)

சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைபபிரிவின் தேசிய பாசறை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி முதல் காலியில் இடம் பெறவுள்ளது.

இலங்கையின் அனைத்து மாவட்டங்களும் பங்குகொள்ளும் இப் பாசறை நிகழ்வில் யாழ். மாவட்டமும் பங்கு பற்றவுள்ளது. [உ-104]

## சந்தைப் புனரமைப்புக்கு 70 இலட்சம் நிதி ஒதுக்கு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி நவீனசந்தை கட்டடப்புனரமைப்பிற்கு மேலும் 70 இலட்சம் ரூபாவினை அமைச்சர் கே.என். டக்ளஸ்தேவானந்தா ஒதுக்கீடு செய்துள்ளதாக நல்லூர் பிரதேசசபைத் தலைவர் க.மணிபல்லவராஜன் தெரிவித்தார்.

கடந்த வருடம் மேற்படி கட்டடப் புனரமைப்பிற்கு 50 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, கொக்குவில் பகுதியில் அண்மையில் அமைக்கப்பட்ட சந்தையை விரிவுபடுத்தும் நோக்குடன் 20 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுளளது. (உ-15)

## மட்டுவில் பகுதி நேற்று சுற்றிவளைப்பு

(தென்மராட்சி)

நேற்றைய தினம் பாதுகாப்புப்படையினர் மட்டுவில் பகுதியைச் சுற்றிவளைத்துள்ளனர்.

இதன் காரணமாக நேற்றைய தினம் மட்டுவில் பகுதியிலுள்ள தமது வீடுகளுக்குச் செல்வதற்காக கோப்பாய் ஊடாகச் சென்றோர் கைதடி நுணாவில்வையிரவர்கோவிலடிச் சந்திக்கு அப்பால் செல்ல அனுமதிக்கப்படவில்லை. (உ-77)

## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

### நாடினோம் அருள் நல்குமே.

கடல் கடந்தருட் கழல் பணிந்தவர்க்
கருள் பொழிந்திடும் மாரியே
இடர் மிகுந்திடும் போதிலே வந்தெம்
இருள் விலக்கிடும் ஜோதியே
விட மிகுந்திடும் அர வமர்ந்திடும்
வித்தகி! வினை சங்கரி- நயினை
நடம்புரி சிவ நாகபூஷணி
நாடினோம் அருள நல்குமே!

★ ★ ★

நாக வாகினி நயினை வாசினி
நாடினோர்க்கருள் சுரக்கு மாரணி
ஏக நாயகி எந்தை தாயும்நீ
ஈசனோ டிடப் பாகமாகி நீ
வேக மாய் வரும் வெவ்வினையெலாம்
விலக்கியே யருள் பொழியு மன்னையே
நாக பூஷணி அம்மையே யுமை
நாடினோம் அருள் நல்குமே!

★ ★ ★

கத்து மாகடல் சூழும் நயினையில்
கருணை மாமழை யாகவே
சித்தியே தரு தேவி நாரணி
சீரணி அரவ பூஷணி
சத்தியே யுமா சர்ப்ப வாகினி
சாம்பவி அருள் சங்கரி
பத்தியோடு உன் பாதமேத்தினோம்
பார்வதி அருள் நல்குமே

★ ★ ★

அலைகடல் தாண்டி வாருங்கள்
அன்னையின் புகழைப் பாடுங்கள்
மலைமகள் உமையாள வரமருளவாள்
மங்கல நயினை வரவேற்கும்
கலைபொலி நயினைத் திருப்பதியில்
கருணைசெய் வடிவில் அமர்ந்தவளே
நிலைபெறு சக்தி நாகம்மை
நித்தம் எமக்கருள் நல்கிடுமே! (நல்கிடுமே)

நயினை இரத்தினசிங்கம்
க.கு.அங.இல-109

## தாயே சரணம் அம்மா

தாயே நீ தருவாய் என்றே
தயவாய் கேட்டோம் சில வரங்கள்
தமிழர் துயரம் நீங்கிட வேண்டும்
தரணியில் அமைதி தவழ்ந்திட வேண்டும்
தந்தருள் புரிவாய் நயினையம்மா ....
தாயே சரணம் சரணமம்மா ....

தம்பியண்ணா

## மணிபல்லவத்தின் நாயகி

நயினையம்பதி நாகபூஷணித் தாயே ஓடிவா
நாதியற்ற எம்மைக்காக்க தாயே ஓடிவா
கதறும் குரல் கேட்கலையே தாயே ஓடிவா
காத்தருள வேண்டுகிறோம் தாயே ஓடிவா
கடல்நடுவே வீற்றிருக்கும் தாயே ஓடிவா
பக்தர் தனைக் காத்திடவே தாயே ஓடிவா
கேட்டவரம் கொடுத்திடுவாய் தாயே ஓடிவா
கெஞ்சுகிறேன் அம்மா உன்னை தாயே ஓடிவா
தாயே ஓடிவா எங்கள் தாயே ஓடிவா

க. பவி
யாழ்ப்பாணம்

பளை மக்கள் பெறமுடியாது போன

## நிவாரணத்தை வழங்க அமைச்சர் விசேடபணிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சியில் ஏற்பட்ட இடம்பெயர்வு காரணமாக கடந்த வருடம் ஏப்ரல் மாதத்திற்கான நிவாரணத்தை பளைப்பகுதியைச்சேர்ந்த 218 குடும்பங்கள் பெற்றுக்கொள்ளவில்லை.

இக் குடும்பங்களுக்கு மேற்படி காலப்பகுதிக்கான நிவாரணத்தை அமைச்சர் டக்ளஸின் ஏற்பாட்டில் விசேட நிவாரணமாக வழங்கவுள்ளதாக யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

எனவே பச்சிலைப்பள்ளியிலிருந்து வடமராட்சியில் தங்கியிருப்பவர்களில் இந் நிவாரணத்தைப் பெறத் தகுதியுடையவர்கள் எதிர்வரும் 9, 10, 11 ஆம் திகதிகளில் புலோலியில் இயங்கும் பளைப் பிரதேச செயலகத்திலும்,

வலிகாமத்தில் தங்கியுள்ளவர்கள் 12, 13, 14 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் இயங்கும் பளைப் பிரதேச செயலக உபஅலுவலகத்திலும் நிவாரண அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனுமதிப் பத்திரம் பெற வரும், போது குடும்பத்தலைவர் தமது அடையாள அட்டை, புதிய, பழைய உலர் உணவு அட்டை என்பவற்றைக் கொண்டு வருமாறு பளைப் பிரதேச செயலர் எஸ் புத்திரசிகாமணி அறிவித்துள்ளார். (உ)

# செய்தித் துளிகள்

## மேலும் இரு குழந்தைகள் பாதிப்பு

(மந்திகை)

நிவாரணத்திற்குவழங்கப்பட்ட பால்மாவை உட்கொண்டு குழந்தைகளுக்கு பாலூட்டியமையால் பாதிக்கப்பட்ட மேலும் இரு குழந்தைகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தும்பளை லூர்த்மாதா மூகாமைச் சேர்ந்த விக்னக (8 மாதம்), புலோலி சிங்க நகரைச் சேர்ந்த பாஸ்கரன் விதுஷா [வயது 2] ஆகிய இருவரும் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். [உ-23]

## இறுதிப் போட்டி

(புலோலி)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் பருத்தித்துறை திக்கம் முனை மைதானத்தில் இன்று சழகத்தலைவர் கே. ஆர் இராசநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலக நிர்வாக அதிகாரி ஆர். விக்னேஸ்வரமூர்த்தி பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்கிறார். (உ-52)

## கைகலப்பில் இருவர் காயம்

(மந்திகை)

அயலாருடன் ஏற்பட்ட கைகலப்பில் காயமடைந்த இருவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை துன்னாலைப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த கே. கதிர்காமத்தம்பி (வயது-47) வி. இராசையா (வயது-65) ஆகிய இருவருமே காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களாவர் (உ-23)

## மருந்து தட்டுப்பாடு நீங்கியது

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் கடந்த 3 மாதங்களுக்கும் மேலாக நீரிழிவு நோய்க்கான மருந்துகளுக்கு நிலவி வந்த தட்டுப்பாடு நீங்கியுள்ளது.

சுகாதாரத் திணைக்களம் மேற்படி மருந்து வகைகளை அண்மையில் அனுப்பி வைத்துள்ளது. (உ-23)

## 18 ஆம் திகதி வரை விளக்கமறியல்

(மந்திகை)

மிருசுவில் பகுதியில் நடைபெற்ற எட்டுப் பேர் படுகொலை சம்பவத்தின் சூத்திரதாரிகள் என சந்தேகிக்கப்படும் படையினர் 14 பேரும் கடந்த புதன்கிழமை சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி முன் ஆஜர் செய்யப்பட்டபோது.

சந்தேக நபர்கள் 14 பேரையும் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (உ-23)

## கூட்டம்

(துன்னாலை)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் செயற்குழுக் கூட்டம் கடந்த வியாழனன்று மு.ப 10. 00 மணிக்கு மன்றின் காரியாலயத்தில் நடைபெற்றது. (உ-41)

## சீவல் தொழிலாளர்க்கு உதவுதொகை

(தென்மராட்சி)

கைதடிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள சீவல் தொழிலாளர்கள் தமது தொழிலை மீண்டும் ஆரம்பிக்க உதவியாக சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் ஒவ்வொரு உறுப்பினருக்கும் தலா இரண்டுஆயிரம் ரூபா வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருவதாக தலைவர் கி பூபாலசிங்கம் தெரிவித்துள்ளார். (உ-77)

## வீடியோக்கடை உரிமையாளர் கைது

(தென்மராட்சி)

திருநெல்வேலி பரமேஸ்வராச்சந்தி வீடியோக்கடை உரிமையாளரான மகேந்திரநாதன் சங்கர் (வயது-34 என்பவர் பாதுகாப்புப் படையினரால் அவரது வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

இக்கைது தொடர்பாக பாதுகாப்புப்படையினர் அவரது குடும்பத்தாரிடம் றசீது வழங்கியுள்ளனர். (உ-77

## நீதிமன்றங்கள் திருத்தமில்லை

(கல்வயல்)

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம், நீதிவான் நீதி மன்றம் ஆகியன பல வருடகாலமாக சேதமடைந்த நிலையில், திருத்தம் ஏதும் மேற்கொள்ளப்படாத நிலையில் இருந்து வருகின்றன.

இவற்றைத் திருத்தியமைப்பதற்கான நடவடிக்கை எதனையும் அரசு இற்றை வரை மேற்கொள்ளாதமை குறிப்பிடத்தக்கது. (உ-111)

## தொடர்ந்தும் விளக்கமறியல்

(மந்திகை)

மிருசுவில் ஒடுவெளிப்பகுதியில் சிப்பாய் ஒருவர் தன்னினச் சேர்க்கைக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இரு சிப்பாய்களும் கடந்த புதனன்று சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் இருவரையும் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிறேம்சங்கர் உத்தரவிட்டார். (உ-23)

## தரமுயர்வு

(மந்திகை)

வடமராட்சி கல்விவலய பாடசாலைகளில் கற்பிக்கும் 21 ஆசிரியர்கள், ஆசிரியர் சேவை தரம் II இல் இருந்து தரம் I இற்கு தரமுயர்த்தப்பட்டுள்ளனர்.

தரம் உயர்த்தப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கான கடிதங்கள் வடக்கு-கிழக்குமாகாண கல்வி அமைச்சின். செயலாளரினால் வலயக்கல்வித்திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (உ-23)

## அதிபர்கள் கூட்டம்

(மந்திகை)

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த வியாழக்கிழமை நடைபெறவிருந்த மேற்படி கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் நாளை ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-23)

# யாழ். போதனா வைத்தியசாலையில் காய்ச்சல் நோயாளர் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த சில தினங்களாக காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறவருவோர் தொகைஅதிகரித்து வருவதாக யாழ். போதனாவைத்தியசாலைப் புள்ளி விபரங்கள் மூலம் அறியப்படுகிறது.

குடாநாட்டில் தற்போது பழவகைகள் மிகுதியாகக் கிடைக்கும் காலமாகையால் அவற்றை பழுக்க வைப்பதற்கும்கெடாமலிருப்பதற்காகவும் போமலின் போன்ற மருந்து வகைகள் உபயோகிக்கப்படுகின்றன.

மீன் கெடாமலிருப்பதற்காகவும் போமலின் பயன்படுத்தப் படுகின்றது.

இத்தகைய நஞ்சு மருந்துகள் செறிந்த பழங்களையும் மீன்களையும் உட்கொள்வதனாலேயே இவ்வாறான காய்ச்சல் நோய்த்தாக்கங்கள் ஏற்படுவதாகவும்,

பொதுமக்கள் இது விடயத்தில் மிகவும் கவனமாக நடந்து கொள்ள வேண்டும் எனவும் மருத்துவ வட்டாரங்கள் எச்சரித்துள்ளன. (உ-10)

## கொட்டடிப் பகுதியில் மீளக் குடியமர ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். கொட்டடி மீனாட்சி அம்மன் கோவிலடிப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு ஏதுவாக அப்பகுதியில் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் மிதிவெடிகளை அகற்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்த வகையில் கடந்த வெள்ளியன்று, படையினர் அப்பகுதியில் மிதிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டனர். [உ]

## மரத்தில் கிளிபிடிக்க முயன்றவர் வீழ்ந்து படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மாமரத்தில்ஏறி கிளி பிடிக்க முனைந்தவர் கீழே வீழ்ந்ததில் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுன்னாகம் தெற்குப் பகுதியில் இடம்பெற்றஇச்சம்பவத்தில் அதேஇடத்தைச் சேர்ந்த பிரான்சிஸ் ரவீந்திரன் (வயது 30) என்பவரேவீழ்ந்து காயமடைந்தவராவார். (உ-10)

## இராசி பலன்

8 7 2001
(ஆனி 24 ஞாயிறு)
திருதியை பி இ 1 45 வரை
திருவோணம் பி.ப 3.15வரை
ராகுகாலம் 4 28 5.58
நல்லநேரம் 8 58-10.28
அமிர்தம்

**மேடம்**

நினைத்த காரியம் கைகூடும், தொழில் சிறப்பு, கடின உழைப்பு உற்சாகம்.

**இடபம்**

கட்டுப்பாடு, ஆன்றோர் மதிப்பு, பிரயாணம, முயற்சி தாமதம்.

**மிதுனம்**

உஷ்ண நிலை, பிரயாண பயம், எதிர்பாராத பிரச்சினை, அமைதிக்குறைவு.

**கடகம்**

போசன சுகம், தனவரவு, கௌரவமான நிலை, காரிய சித்தி;

**சிங்கம்**

முயற்சி விருத்தி, மன மகிழ்ச்சி, காரிய நன்மை, கீர்த்தி.

**கன்னி**

குடும்பக் கவலை, உடல் சோர்வு, முயற்சி தாமதம், எதிர்பாராத நன்மை.

**துலாம்**

உறவினர் மனஸ்தாபம், கல்வி மேன்மை, வேண்டாத உறவு, காரிய தாமதம்.

**விருச்சிகம்**

சந்தோசமான சம்பவம், வாக்கு நன்மை, சகோதரர் உதவி, குடும்ப சுகம்.

**தனுசு**

வீண் வாக்குவாதம், பொருள் விரயம், காரியதாமதம், நண்பர்கள் மனஸ்தாபம்.

**மகரம்**

புதிய முயற்சி, பெரியோர் மதிப்பு, கற்பனை மிகுதி புதிய பொருள் சேர்க்கை.

**கும்பம்**

காரிய தாமதம், நித்திரைக் குறைவு, அவமானம், வீண் செலவு.

**மீனம்**

பெருமை, தனலாபம், குடும்பசுகம், காரியம் கைகூடும்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## பாதுகாப்பற்ற நிலையில் நாரந்தனை மீன்சந்தை

(ஊர்காவற்றுறை)

நாரந்தனை மீன்சந்தைக் கொட்டகை பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் அமைந்திருப்பதாக கூறப்படுகிறது இக் கொட்டகையின் தூண்களில் சில சிதைந்த நிலையில் காணப்படுவதாகவும்,

இதனால் மீன்வியாபாரிகளும, மீன்வாங்கச் செல்வோரும் மிகுந்த அச்ச நிலையில் இருப்பதாகவும் தெரிய வந்துள்ளது. (உ-75)

## ஏழு தினங்களில் 202 மிதிவெடிகள் மீட்பு

(கொழும்பு)

கடந்த மாதம் 29 ஆம் திகதி தொடக்கம் இம்மாதம் 5 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் மட்டுவில் பகுதியில் வெவ்வேறு சம்பவங்களில் 3 படையினர் காயமடைந்துள்ளதாகவும்,

202 மிதிவெடிகள், ஒரு கிளைமோர் கண்ணிவெடி, ஒரு டாங்கி எதிர்ப்பு பீரங்கி என்பன மீட்கப்பட்டதாகவும் ஊடகத் தகவல் நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது; (உ)

## வனத் திணைக்களம் செயற்பாடில்லை

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் உள்ள வனத் திணைக்களம் செயற்பாடுகள் ஏதும் அற்று இருப்பதாக கூறப்படுகிறது.

சுண்டுக்குளியில் இத்திணைக்களம் தனியான கட்டடத்தில் முன்பு இயங்கி வந்த போதிலும் தற்போது ஒரு வன திணைக்கள உத்தியோகத்தரே இங்கு கடமையாற்றி வருவதால் அதன் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது இருப்பதாக சுட்டிககாட்டப்படுகிறது.

இதேவேளை, 1995 ஆம் ஆண்டு இடம் பெற்ற இடப்பெயர்வின் முன்னர் 6 வன திணைக்கள உத்தியோகத்தர் இங்கு கடமையாற்றி வந்துள்ளனர். (உ-6)

## மாணவனுக்கு சூடுபோட்ட ஆசிரியை 10 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை

(புலோலி)

முன்பள்ளிச் சிறுவனொருவனுக்குச் சூடு போட்டதனால் றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த முன்பள்ளி ஆசிரியையை 10 இலட்சம் ரூபா சரீரப் பிணையிலும் 30 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் செல்ல கொழும்புக் கோட்டைமாவட்ட நீதவான் பிரியந்த பெர்னான்டோ உத்தரவிட்டதோடு நீதிமன்ற முன் அனுமதியின்றி வெளிநாட்டிற்குச் செல்லக்கூடாதென்றும் கண்டிப்பான உத்தரவும் வழங்கியுள்ளார்.

கொழும்பில் உள்ள பாலர் பாடசாலையொன்றின்மாணவனின் உடுப்பு அழுக்கடைந்திருந்த காரணத்தினால் அப்பாடசாலைஆசிரியை திருமதி ராஜேஸ்வரி ஸ்ரீரங்கன் மாணவனின் பின்புறத்தில் சூடு போட்டார் என்று குற்றஞ்சாட்டித்தொடரப்பட்டவழக்கில் ஆசிரியையை றிமாண்டில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்திருந்தார். (உ-52)

## இன்று ஒரு தகவல்

# உண்மையே உயர்வானது

நெடுங்காலத்திற்கு முன் ஒரு நாட்டை ஓர்அரசன் நன்னெறி தவறாமல் ஆண்டுவந்தான். அவன் புகழ் உலகெங்கும் பரவியிருந்தது. அவன் நாள் தோறும் அதிகாலையில் தன்னந்தனியாக கோட்டைக்கு வெளியே சென்று கடலில் நீராடி விட்டுத் திரும்புவான். ஒரு நாள் நீராடச் சென்ற அவன் அழகான பெண் ஒருத்தி கோட்டையை விட்டு வெளியே சென்று கொண்டிருப்பதைப் பார்த்தான். அவளிடம் சென்று 'அம்மா தாங்கள் யார்? இந்த நேரத்தில் எங்கே செல்கிறீர்கள்' என்று கேட்டான்.

நான் தான் திருமகள். எந்த இடத்திலும் நான் அதிக காலம் தங்கக் கூடாது. இந்த நாட்டில் நான் நெடுங்காலமாகத் தங்கி விட்டேன். ஆகவே மாற்றம் வேண்டி வேறு இடம் செல்கிறேன் என்றாள் அந்தப் பெண். உங்களுக்கு எங்கு விருப்பமோ அங்கு செல்லுங்கள், நான் தடுக்கமாட்டேன் என்றான் அரசன். அந்தப் பெண்ணும் வெளியே சென்று மறைந்து விட்டாள் சற்று நேரத்தில் இன்னொரு பெண் வந்தாள். நான் தான் கொடை. திருமகள் இல்லாத இடத்தில் என்னால் இருக்க முடியாது. ஆகவே நானும் இந்நாட்டை விட்டுச் செல்கிறேன்' என்று அரசனிடம் சொன்னாள். அரசன் அவளையும் தடுக்கவில்லை.

சிறிதுநேரத்தில் இன்னொரு பெண் அங்கு வந்தாள். 'திருமகளும் கொடையும் இல்லாத இடத்தில் நன்னடத்தையாகிய என்னால் எப்படி இருக்க முடியும் நானும் போகிறேன்' என்றாள். அரசன் மறுப்பேதும் சொல்லாமல் அமைதியாக நின்றான். நான்காவதாக வேறொரு பெண் அங்கே வந்தாள். 'நான் தான் உண்மை' திருமகளும், கொடையும், நன்னடத்தையும் இல்லாத இடத்தில் என்னால் எப்படி இருக்க முடியும்? நான் வருகிறேன்' என்றாள்.

அவள் கால்களில் விழுந்த அரசன் 'அம்மா! யார் இல்லாமலும் என்னால் இந்நாட்டில் இருக்க முடியும். உண்மையாகிய தாங்கள் இந்நாட்டில் தங்கியே ஆக வேண்டும்' என்று பணிவாக வேண்டினான் அவனின் வேண்டுகோளுக்கு இணங்கிய உண்மையும் அந்நாட்டிலேயே தங்க ஒப்புக் கொண்டாள் சிறிது நேரத்தில் நன்னடத்தை திரும்பவும் அந்நாட்டிற்குள் வந்தாள். 'உண்மையிருக்கும் இடத்தில் தான் நான் இருப்பேன்' என்றாள். அடுத்துக் கொடையும் திரும்பி வந்து 'உண்மையும், நன்னடத்தையும், தங்கிய இடத்தில் நான் இருந்தாக வேண்டும்' என்றாள். இம்மூவரும் இருக்குமிடத்தில் நான் இருப்பேன் இந்த நாட்டை விட்டு நீங்கமாட்டேன்' என்றாள் திருமகள்.

பேராசிரியர் எ. சோதி

# சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர் பரீட்சைகளில் சித்தியடைந்தோர்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினரால் கடந்த வருடம் நடத்தப்பட்ட சைவப் புலவர் இளம் சைவப்புலவர் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் திட்டமிட்டவாறு இன்று நடைபெறாதுஎனவும், 22ம் திகதி நடைபெறும் எனவும் அகில இலங்கை சைவப் புலவர் சங்கப் பரீட்சைச் செயலாளர் வ கந்தசாமி தெரிவித்தார்.

மேற்குறித்த தினத்தில் யா/வண்ணை நாவலர் வித்தியாலயத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ள இந்நிகழ்வில், யாழ். மாவட்டரீதியாக நடத்தப்பட்ட புராண படனப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

சைவப் புலவர், இளம் சைவப் புலவர் பரீட்சைகளில் சித்தியடைந்து சான்றிதழ் பெறத் தகுதியானவர்களின் பெயர்கள் வருமாறு.

### சைவப்புலவர்

க. இராகினி, ஐ சித்திரா, சி. மதனமோகனராஜ், க. கலைவாணி, கே. ஜேந்தினி, தி வரதராணி, தி றூபி க. குணரத்தினம், சிவரஜனி, த. மூதினி, ச தயாநிதி, நா. கலாதரன், பொ. சந்திரசேகரன், சி முகுந்தன், சி சசிகலா, தா. பக்தமீரா, நி. பவானந்தசர்மா, இ. றமணப்பிரியா து ஜெயதேவன், க. தேவகி, சி வசந்தகுமார் வே. கமலேஸ்வரன், சு. மேனரஞ்சினி, ப கோமதி, அ இராசரட்ணம், உ: காஞ்சனா, த, சுபாஜினி, ப. பாலேந்திரம், ச. கலையரசி, ப. சுமதி, அ. கருணாகரன், வே. ஜெயகுரு, ம. சுபைதா.

### இளம் சைவப்புலவர்

நா. ஜெயகௌரி, பா சர்வேஸ்வரசர்மா, கு. அரசேஸ்வரன் ம ஜமுனா, ந தயாளினி, ந, லலிதா, ச யோகரூபி, ச நாகேஸ்வரி வி. பராசக்தி, நா. பன்னீர்செல்வி, க. செல்வகுமார், அ. மீனலோகினி, செ. இந்திரா, ப. ருத்திராதேவி, கு கிருபாகினி, அ. மனோகரன், கு லலிதர, அ சுப்பிரமணியம் (உ-6)

## அடிக்கல் நாட்டல்

[மந்திகை]

பருத்தித்துறை நகரில் பயணிகள் இளைப்பாற்று மண்டபம் மற்றும் கொல்களம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் அண்மையில் நடைபெற்றது

நவீன வசதிகளுடன் கூடிய இளைப்பாற்று மண்டபம் 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவிலும். கொல்களம் 3 இலட்சம் ரூபா செலவிலும் அமைக்கப்படவுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (உ-23)

## தலைமைத்துவ பயிற்சி

(துன்னாலை)

கிராம அபிவிருத்தித் திணைக் களத்தின் அனுசரணையுடன் கரவெட்டி பிரதேச செயலகத்தால் நடத்தப்படும் தலைமைத்துவப் பயிற்சி கடந்த 2 ஆ திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது (உ-41)

## இந்துவாலிபர் சங்கப்பவளவிழா

(யாழ்ப்பாணம்)

சங்கரத்தை இந்து வாலிபர் சங்கத்தின் எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவையொட்டிய பவள விழா நிகழ்வுகள் நேற்றும் இன்றும் நடைபெறுகின்றன

இன்றைய சிறப்பு நிகழ்ச்சிகளாக கவியரங்கம், நகைச்சுவை நாடகம், ராகம்ஸ் இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சி என்பன இடம் பெறவுள்ளன. (செ)

## திறப்பு விழா

(இணுவில்)

யு என் எச் சி ஆர். நுண் கருத்திட்டத்தின் கீழ் தாவடி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நவீன மயப்படுத்தப்பட்ட கடித உறைத் தொழிலகத் திறப்பு விழா கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (உ-49)

## மரத்தால் வீழ்ந்து படுகாயம்

(மந்திகை)

தென்னை மரத்தில் இருந்து தவறி வீழ்ந்ததில் படுகாயமடைந்த கொடிகாமத்தைச் சேர்ந்த குணரத்தினம் விஜபகுமார் (வயது 28) என்பவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (உ-23)

## போராட்டம் தொடரும்

(யாழ்ப்பாணம்)

யாழ்பல்கலைக்கழகவிஞ்ஞான பீட மாணவனும் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் செயலாளருமான கிருஷ்ணபிள்ளை திவ்வியன் விடுதலை செய்யப்படும்வரை மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடருமென மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

திவ்வியனின் கைதுதொடர்பாகப்படையினர்பொய்ப்பிரச்சாரம் செய்துவருவதாகவும், அவர்விடுதலை செய்யப்படாவிட்டால் பகிஷ்கரிப்பு போராட்டம் விஸ்தரிக்கப்படும் எனவும் மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (6)

# இறப்பு, பிறப்பு பத்திரங்கள் விரைவில் பெற ஒழுங்கு

(கல்வயல்)

யாழ்ப்பாண மாவட்டச் செயலக பிறப்பு, இறப்பு விவாக மேலதிகப் பெரும் பதிவு காரியாலயத்தினர் புதிய நடைமுறைகள் சிலவற்றை அறிவித்துள்ளனர்.

இன் பிரகாரம், பிறப்பு, இறப்பு விவாகச் சான்றிதழ்கள் பெறுவதற்கான விண்ணப்பங்களை அலுவலக நாட்களில் காலை 9 30 மணியில் இருந்து நண்பகல் 12 30 மணிவரையுமே பெற்றுக் கொள்ள முடியும்.

இதனுடன் 5 ரூபா பெறுமதியான முத்திரையுடன், சுயமுகவரியிட்ட நீண்ட கடித உறையை இணைப்பதன் மூலம் பத்திரங்களைப் 10 நாட்களுக்குள் பெற்றுக் கொள்ள முடியும்.

மேற்படி பத்திரங்கள் அவசரமாக தேவைப்படுவோர் உரிய அத்தாட்சியை மாவட்ட மேலதிகப் பெரும் பகுதிப் பதிவுக்காரருக்குச் சமர்ப்பித்து விரைவில் பெற்றுக் கொள்ளலாம். (உ-111)

# கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு

(கல்வயல்)

பருத்தித்துறை நகராட்சி மன்றம், அதன் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திரியும் கட்டாக்காலி நாய்களை எதிர் வரும் 11, 25 ஆம் திகதிகளில் நஞ்சூட்டி அழிப்பதற்குத் தீர்மானித்துள்ளது.

ஆகையால், அனுமதி பெற்ற வளர்ப்பு நாய்களை இத் தினங்களில் கட்டி வைக்குமாறு நகராட்சி மன்றத்தின் உபதலைவர் நா. மணிவண்ணன் தெரிவித்துள்ளார். (உ-111)

# பிரதமநீதியரசருக்குஎதிரான குற்றவியல் பிரேரணைக்கு உயர் நீதிமன்றம் தடை

(கொழும்பு)

பிரதம நீதியரசர் சரத் என். சில்வாவிற்கு எதிராக ஐக்கிய தேசியக்கட்சி சமர்ப்பித்துள்ள குற்றவியல் பிரேரணைக்கு கொழும்பு உயர் நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு விதித்துள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணைக்கு ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த 67 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒப்பமிட்டு சபாநாயகர் அனுரா பண்டார நாயக்காவிடம் சமர்ப்பித்திருந்தனர்.

கொழும்பு உயர்நீதிமன்றத்தின் பிரதம நீதியரசர்கள் பியந்தபெரேரா, ஷிரியாணி பண்டாரநாயக்கா, எஸ். எஸ். யாப்பா ஆகியோரே இந்த இடைக்கால தடை உத்தரவை விதித்திருந்தனர்.

இதேவேளை இத்தடை உத்தரவிற்கு எதிராக அடிப்படை மனித உரிமை மீறல் மனு ஒன்றை சிற்றிக் சங்கத்தின் மூவர் அடங்கிய குழுவினர் தாக்கல்செய்தமனுவையும் உயர்நீதிமன்றம் ஏற்றுள்ளது. இதுதொடர்பான விசாரணைகள் இன்று ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. (வ)

# தே.ஐ.மு. தலைவர்கள்சென்ற வாகனங்கள் மீது அதிருப்தியாளர் கல்வீச்சு

(கொழும்பு)

அம்பாறையில் கடந்தவியாழன் நடைபெற்ற தேசிய ஐக்கிய முன்னணியின் பேராளர் மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றவர்கள்மீது பல இடங்களில் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

அம்பாறை நகரமண்டபத்தில் நடைபெற்ற மாநாட்டிற்கு சென்று கொண்டிருந்த தே. ஐ. மு வின் தலைவர்கள், ஆதரவாளர்கள் சென்ற வாகனங்கள் மீது சம்மாந்துறை, கல்முனை, மாவடிப்பள்ளி ஆகிய இடங்களில் வைத்து கல்வீச்சு தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இத்தாக்குதல்களில் அமைச்சர் பேரியல் அஷ்ரப்பின் பாதுகாப்பு வாகனம்முற்றாக சேதத்துக்குள்ளானதுடன் மூன்று பேருந்துகள் உட்பட மேலும் 6 வாகனங்கள் சேதமடைந்தன; சம்பவங்கள் நடந்த இடத்துக்கு விரைந்த பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் ஆகாய வேட்டுக்களை தீர்த்து தாக்குதல் நடத்தியவர்களை அடித்தும் விரட்டினார்கள்.

இச்சம்பவங்களில் அதிரடிப் படையைச் சேர்ந்த ஒருவர் உட்பட ஆறுபேர்காயமடைந்தனர்.

இம்மாநாட்டில் கலந்து கொள்பவர்கள முஸ்லிம்களை காட்டிக்கொடுக்கும் துரோகிகள், அரசின் கைக்கூலிகள் என்றும் இவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கும் சுவரொட்டிகள் ஏறாவூரில் பரவலாக ஒட்டப்பட்டிருந்ததாகவும் தெரியவந்துள்ளது

இதேவேளை, நேற்று முன்தினம் ரவூப் ஹக்கீம் தலைமையில் கூடிய முஸ்லிம்காங்கிரஸின் உயர்பீடம் தே. ஐ முவின் மாநாட்டில் எடுக்கப்படும் முடிவுகள் எதுவும் செல்லுபடியாகாது என அறிவித்துள்ளது. (உ-8)

# ஆசிரியர்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பான கருத்தரங்கு

(திருமலை)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினால் நேற்று சனிக்கிழமை தொடக்கம் நாளை 9ஆம் திகதி திங்கட்கிழமை வரை ஆசிரியர்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பான கருத்தரங்கு நடத்தப்பட்டு வருகிறது.

சர்வதேச கல்வியகமும் நோர்வே ஆசிரியர் சங்கமும் இணைந்து நடத்தும் இக்கருத்தரங்கு திருமலை சில்வெஸ்ரர் ஹோட்டலில் நடைபெறுவதாக ஆசிரியர் சங்க பிரசாரசெயலாளர் வீ.ரீ. சகாயதேவராஜா தெரிவித்துள்ளார். (செ)

# பாடநூல் விநியோகம் விரைவில் சீராகும்

[யாழ்ப்பாணம்]

கல்வி அமைச்சரை தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக் குழுவினர் அண்மையில் அவரது அலுவலகத்தில் சந்தித்து உரையாடிய போது,

நாடு பூராகவும் உள்ள ஆசிரிய மத்திய நிலையங்களில் முல்லைத்தீவு, துணுக்காய், கிளிநொச்சி ஆகிய ஆசிரிய மத்திய நிலையங்களில் மாத்திரம் கணனி இல்லாது இருப்பதுபற்றி சுட்டிக் காட்டினார்கள்.

அந்தந்தப் பகுதி வலயக் கல்விப்பணிப்பாளர்கள் இது தொடர்பாகஅறிக்கை சமர்ப்பிக்குமிடத்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வியமைச்சர் உறுதியளித்தார்.

அத்துடன், பாடநூல் விநியோகத்தில் வடக்கு-கிழக்கில் நிலவும் பாரபட்ச நிலையைப் போக்க விரைந்துநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்தார். (உ)

# கொங்கொங்கில் சூறாவளி
# 34 பேர் பலி; பலரைக் காணவில்லை

(கொங்கொங்)

கொங்கொங்கின் வடக்குப் பகுதியில் வீசிய உசோர் என்ற பெரும் சூறாவளியினால் 34 இற்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர் மேலும் பலர் காணாமல் போயுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை வீசிய இந்தச் சூறாவளியினால் ஆயிரத்திற்கும் அதிகமான வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன.

பெருமழையினால் மரங்கள், மின் கம்பங்கள் போன்றன வீதிக்குக்குறுக்கே வீழ்ந்து போக்கு வரத்துக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

கொங்கொங்கின் ஆறுகள், நகருக்குள் புகுந்து மக்களின் உடமைகளை அடித்துச் சென்றுள்ளன.

பாலங்கள் அனைத்தும் விழுந்துள்ளதாகவும் பல நூறுக்கணக்கானவர்களை வெள்ளம் அடித்துச் சென்றுள்ளதாகவும், மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச்சூறாவளி தாய்வான், தென்சீனா மற்றும் வியட்நாம் முதலிய நாடுகளையும் தாக்கியுள்ளது. வியட்நாமின் பிரதமர் மக்களை பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வியட்நாமின் பாடசாலைகள், மற்றும் அரச தனியார் நிறுவனங்களும் கடந்த 3 நாட்களாக இயங்காத நிலையில் உள்ளதாக தெரியவருகிறது. (உ-7)

## பாகிஸ்த்தான், இந்திய பேச்சு வார்த்தை இழுபறி நிலையில்

(புதுடில்லி)

இந்திய- பாகிஸ்தான் நாடுகளிடையே அடுத்த மாதம் நடத்த திட்டமிட்ட பேச்சு வார்த்தையில் இழுபறி நிலை தோன்றியிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

பாகிஸ்தான் ஜனாதிபதி பெர்வேஸ் முஷாரப், காஷ்மீர் தீவிரவாதிகளின் கூட்டணியான குரியத் மாநாட்டுக் கட்சித் தலைவர்களைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தியிருப்பதையடுத்தே இழுபறிநிலை தோன்றியுள்ளது. (உ)

## பொப் பாடகி மடோனா உலக சுற்றுப் பயணம்

(ரோக்கியோ)

பொப் இசை உலகசாதனையாளர் பாடகி மடோனா அமெரிக்க சுதந்திர தினத்தை முன்னிட்டு உலக சுற்றுப் பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

லண்டன் சென்ற போது கடந்த புதன்கிழமை அங்கு இடம் பெற்ற இரவு இசை நிகழ்ச்சியில் 18 ஆயிரம் ரசிகர்கள் கலந்து கொண்டனர்.

13 வாரங்கள் இடம்பெறவுள்ள இவரது சுற்றுப் பயணத்தின் போது 17 நாடுகளில் 48 இசை நிகழ்ச்சிகளை 42 வயதான இவர் நடாத்தவுள்ளார்.

பாடகி மடோனாவுக்கு ரசிகர்கள் மத்தியில் இருந்து ஒவ்வொரு நிமிடமும் 27 ஆயிரம் பவுண் சேர்வதாக பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (உ-7)

## இந்திய இராணுவ நடவடிக்கை தலைமை இயக்குநர் பாகிஸ்தானுக்கு அவசர பயணம்

[புதுடில்லி]

இந்திய இராணுவ நடவடிக்கைத் தலைமை இயக்குநர் லெப்டினன்ட் ஜெனரல் வியோனோபிரோடா பாகிஸ்தான் செல்ல இருக்கிறார்.

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயின் திடீர் உத்தரவின் பேரிலேயே இப்பயணத்தை அவர் மேற்கொள்ளவுள்ளார்.

இந்திய-பாகிஸ்தான் எல்லைப்புறங்களில் அமைதியை நிலை நாட்டும் நோக்கில் இப்பயணம் அமைகிறது என்றும் அவர் பாகிஸ்தானின் இராணுவ நடவடிக்கைத் தளபதியை சந்தித்து உரையாடுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நடவடிக்கையால்இரு நாட்டுத் தலைவர்களின் பேச்சுக்கள் சுமுக நிலை அடைய வாய்ப்பு இருக்கின்றது என்று கருதப்படுகிறது.

இந்தியாவின் இந்த நடவடிக்கைகளைப் பாகிஸ்தான் பத்திரிகைகள் வெகுவாக வரவேற்றுருக்கின்றன.

பாகிஸ்தானும்இதுபோன்ற நடவடிக்கைகளில் இறங்கலாமெனத் தெரிவு வருகிறது. [து]

## மியன்மாரில் எதிர்க் கட்சியினர் விடுதலை

(ரங்கூன்)

மியன்மார் எதிர்க் கட்சித் தலைவர் உட்பட ஏழு பேரை இராணுவ ஆட்சியாளர்கள் விடுதலை செய்துள்ளனர்.

இராணுவ ஆட்சியாளர்களால் ஏற்கனவே கைது செய்யப்பட்டு சிறையிலிருந்து விடுதலையான 200 பேரில் கடைசியாக விடுதலை செய்யப்பட்டவர்கள் இவர்களாவர் [illegible] (து)

## முதல்வர் சந்திப்பு

(சென்னை)

தமிழக பதில் ஆளுநராக பதவியேற்றிருக்கும் டாக்டர் ரங்கராஜன்ன தமிழக முதல்வர் ஜெயலலிதா நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியுள்ளார். (உ)

## மு.க. ஸ்டாலின் விடுதலை

(சென்னை)

சென்னைநகரமேயர் மு.க. ஸ்ராலின் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டார்.

மேம்பால ஊழல் வழக்கில் தி.மு.க. தலைவர் கருணாநிதி கைதுசெய்யப்பட்டதை தொடர்ந்து அவரது மகனும் சென்னைநகர மேயருமான ஸ்டாலினும் கைதுசெய்யப்பட்டுமதுரைசிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

ஸ்டாலின், முன்னாள் அமைச்சர்கள் பொன்முடி கோசிமணி, முன்னாள் தலைமை செயலர்கே.ஏ நம்பியார் ஆகியோரை பிணையில்விடுவிக்கும் உத்தரவை முதன்மை அமர்வு நீதிபதி அசோக் குமார் நேற்று முன்தினம் வழங்கியிருந்தார். (ஓ)

## பாட்டாளி மக்கள்கட்சி மீண்டும் தே. ஜ. மு.இன் கூட்டாளி

(சென்னை)

மீண்டும் பாட்டாளி மக்கள் கட்சி தேசிய ஜக்கிய முன்னணியுடன் இணைய இருக்கிறது.

ஜெயலலிதா அரசின் காவல் துறை அதிகாரிகளால் முன்னாள் முதல்வர் கருணாநிதி பலாத்காரமாகச் சிறைபிடிக்கப்பட்டதைக் கண்டித்தும், அவரைச் சிறையில் சென்று சந்தித்த மத்திய அரசில் டாக்டர் இராமதாஸ் மீண்டும் இணைவதற்கு தரிய சாத்தியக் கூறுகளைக் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## உலக தரிசனம்

இதேவேளை, மத்திய அமைச்சர் ஒருவரிடம் இவரை மீண்டும் சேர்த்துக் கொள்ளக் கூடிய சூழ் நிலை இருக்கிறதா என்று கேட்ட போது தேசிய அரசியல் நீரோட்டத்தில் டாக்டர் இராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சி இணைவதில் எவ்வித வியப்பும் இல்லையென்றும் தெரிவித்தார்.

இதற்கிடையில் மாநிலங்களவைத் தேர்தலில் பாட்டாளி மக்கள் கட்சிக்குஒரு இடம் ஒதுக்குவதாக முதல்வர் ஜெயலலிதா ஒப்புதல் அளித்து விட்டு இப்பொழுது அதைத்தர முடியாதென்று கைவிரித்து விட்டாரென்றும் அதனால்தமதுகட்சிஅ இ அ. தி மு க,வில் ஒட்டிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லையென்றும் டாக்டர் இராமதாஸ்தெரிவித்தார்.

விரைவில் பிரதமர் வாஜ்பாயை டாக்டர் இராமதாஸ் சந்திக்க இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (து

## ஆர்ஜென்டீனா முன்னாள் ஜனாதிபதி மீது ஊழல் குற்றச்சாட்டு

(புவனர்ஸ்அயரிஸ்)

ஆர்ஜென்டீனா முன்னாள் ஜனாதிபதி கார்ளோஸ் மெனம் மீது சட்ட விரோத ஆயுத விற்பனை தொடர்பாகக்குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

1984 ஆம் ஆண்டு தொடக்கம் 1999 வரையான காலப் பகுதியில் ஈக்குவடோர் மற்றும் குறோஷிய நாடுகளுக்கு ஆயுதங்களை விற்றமை தொடர்பாக அந்நாட்டு நீதிமன்றம் மெனம் மீதும் அவரது நிர்வாகத்தில் முக்கிய இடம் வகித்த மேலும் மூவர் மீதும் குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக மெனம் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவர் 10 வருட சிறை வாசத்தை அனுபவிக்க வேண்டி வரும் என்றும், அவரது 30 இலட்சம் டொலர் பெறுமதியான சொத்துக்களைத் தடுத்து வைக்கவும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (உ-7)

## ஜேர்மன் நாட்டு முன்னாள் ஜனாதிபதியின் மனைவி தற்கொலை

(பேர்லின்)

ஜேர்மன் முன்னாள் ஜனாதிபதி ஹெல்மன்ட கோலிஸின் மனைவி தற்கொலை செய்துள்ளார்.

68 வயதான இந்தப் பெண்மணி சூரிய ஒளி ஒவ்வாமை நோயின் கடும் பாதிப்புக்குள்ளாகியதால் [illegible] யே தனது காலத்தை கழித்து வந்துள்ளார்.

மேற்படி நிலைகாரணமாகவே விரக்தியுற்ற நிலையில் தான்தற்கொலைசெய்வதாக கடிதம் எழுதிவைத்து விட்டு தற்கொலை செய்து கொண்டதாகத் தெரியவருகிறது. [உ-7]

## ஜனாதிபதி ஆதரவாளர் சுட்டுக்கொலை

(லண்டன்)

கென்யா ஜனாதிபதிக்குஆதரவாக பிரசாரம் செய்தவரான முகாமையாளர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கென்யாவின் மூன்று பிரதான அமைச்சர்களுக்கு எதிராகவும் ஜனாதிபதிக்கு ஆதரவாகவும் பிரசாரம் மற்றும் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்ட பிரபல முகாமையாளரே நேற்று முன்தினம் காலை அவருடைய மனைவிக்கு முன்னால வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக கொல்லப்பட்டவரின் மனைவி தகவல் தெரிவிக்கையில் துப்பாக்கியுடன் வந்த குழுவினருள் அமைச்சர் ஒருவரும கூட வந்தார் என்று தெரிவித்துள்ளார். (உ-7)

## பாகிஸ்தான் தூதர் சந்திப்பு

(ஜகார்த்தா)

பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் ஜனா கிருஷ்ண மூர்த்தி இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதுவரைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

இவ் 45 நிமிட நேரச் சந்திப்பில் ஐம்பது ஆண்டுகளாக இருந்து வரும் பிரச்சினைக்கு முடிவு காணும் முன் சந்திப்பாக அமைந்துள்ளது. (து)

## வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

### இன்னுமோர் உலகம் உதயமாகியுள்ளது

நெப்டியூன் கோளுக்கு அண்மையாக சூரியனைச் சுற்றிக்கொண்டிருக்கும 'உலகம்' ஒன்றை அரிசோனா விண்வெளி ஆய்வு நிறுவனத்தினர் கண்டுபிடித்துள்ளனர்.

உலகம் என்று கூறுமளவுக்கு இது பெரியது. இதன் விட்டம் 788 மைல்கள் (ஆயிரத்து 270 கி.மீ) என்று அதன் பிரகாசத்தை அடிப்படையாகக்கொண்டு கணிப்பீடு செய்திருக்கிறார்கள.

சிவப்பு நிறமான இது பனிக்கட்டியால் மூடப்பட்டிருக்கிறது. புளூட்டோவைச் சுற்றி வந்து கொண்டிருக்கும். துணைக்கோளான Charon ஐவிடவும் இதுபெரியது. அரிசோனாவிலுள்ள லொவெல் ஆய்வு நிலயம் 2001 KX 76 என்ற இந்த உலகத்தை கண்டுபிடித்துள்ளது இது சூரியனிலிருந்து 4 பில்லியன் மைல்கள் 6.4 பில்லியன கி.மீ) தூரத்திற்கப்பால் சுற்றிவருவதாக விண்வெளி விஞ்ஞானி லோறன்ஸ் வாசமன் தெரிவித்தார். நெப்டியூன் 4 கடவை சூரியனைச் சுற்றிவரும் காலத்தில் 2001 KX 76 மூன்று தடவை சுற்றிவருகிறதாம்.

### ★ 'டாங்கி'-வந்த காரணம் தெரியுமா?

யுத்தங்களில் டாங்கிகளை முதலில் பயன்படுத்தியவர்கள் பிரிட்டிஷ் காரர்தான். இதுஒருபோர்த் தளபாடம் என்று எதிரிகளுக்கு தெரியக்கூடாது என்பதில் பிரிட்டிஷ்காரர் கவனமாக இருந்தார்களாம்.

யாராவது இதுஎன்ன என்று கேட்டால் பாலைவனங்களில் பணிபுரியும் பிரிட்டிஷ் வீரர்களுக்கு தண்ணீர் கொண்டு செல்லும் வண்டி என்றே கூறப்பட்டதாம்.

எனவே அந்த வண்டியை யாராவது கண்டால் ''அந்தா TANK (தண்ணீர்த்தாங்கி) போகிறதென கூற' இறுதியில் அந்தயுத்த வாகனத்திற்கு'டாங்கியே' நிலையான பெயராகி விட்டது.

-அவதானி-

அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.
குறள்

வலம்புரி

## பல்கலைக் கழக மாணவன் கைது!

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இறுதி வருட மாணவன் திவ்வியன் படையினரால் கைது செய்யப்பட்ட சம்பவம் பல்கலைக் கழக மாணவர்களிடையே பெரும் விசனத்தையும், விரக்தியையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இலங்கையின் ஏனைய பல்கலைக் கழகங்களின் சூழ் நிலையினின்றும் வேறுபட்டது. ஏனைய பல்கலைக் கழகங்களில் மாணவர்கள் அனுபவிக்கின்ற வசதி வாய்ப்புக்கள் யாழ். பல்கலைக் கழக மாணவர்களுக்குக்கிடைப்பதில்லை. இருந்தும் எத்தனையோ அசௌகரியங்களை அனுபவித்துக் கொண்டு மாணவர்கள் தமது கற்றல் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

இந் நிலையில் இறுதி வருட மாணவன் திவ்வியனின் கைதுமாணவர்களின் பாதுகாப்பில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், யாழ்ப்பாணத்தில் தமிழ் இளைஞர்கள் சுதந்திரமாக வாழ முடியாது என்ற உணர்வையும் ஏற்படுத்திவிட்டது.

மாணவன் திவ்வியனின் கைதால் பல்கலைக் கழக மாணர்கள் தொடர்ந்து பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இப் போராட்டம் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டமாக மாறுமெனவும், பாடசாலை மட்டத்திலும் விரிவுபடுத்தப்படுமெனவும் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் முன்கூட்டியேஅறிவித்துள்ளது

மாணவர் ஒன்றியத்தின் இவ் அறிவித்தலைபடைத்தரப்பினர் செவி சாய்க்காது சாட்டுப் போக்குக் கூறித் தட்டிக் கழிப்பார்களேயானால் விளைவு பாரதூரமாகவே அமையும்.

சில வேளைகளில் யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் வீதிகளில் இறங்கிப் போராட முனைந்தால், அதனால் ஏற்படும் விபரீதத்தின் முழுப் பொறுப்பையும் படையினரே பொறுப்பேற்க வேண்டி வரும்.

காலா காலமாக தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுதல், காணாமல் போதல் போன்ற நீசம் இன்னமும் விடுவதாக இல்லை. நாட்டில் சிங்கள இளைஞர்களுக்கு இருக்கும் பாது காப்பு தமிழ் இளைஞர்களுக்கும் என்று கிடைக்கிறதோ அன்று தான் படையினர் மீது தமிழ் மக்களுக்கு ஓர் நம்பிக்கைஏற்படும். அதுவரை நிலைமை கேள்விக்குறி தான்.

---

பரமபிதா காட்டிய பாதை

# எத்தனை இடர்கள் எம்மைச் சூழ்ந்து வரினும்

# ஆன்மீக வாழ்வின் இலக்கு எட்டப்பட வேண்டும்



''கலப்பையில் கைவைத்த பின் திரும்பிப் பார்ப்பவன் எவனும் கடவுளின் அரசிற்குத் தகுதியற்றவன்''

கடவுளின் பரிசுத்த இராச்சியத்தை அடையும் ஆவலுடைய நாம் அனைவரும் அவர் வார்த்தையின் வழியில் கால் வைத்தபின் ஏனைய உலகியல் ஆசைகளில் புலனை செலுத்தினால் உண்மையான உயிருள்ள இறை அரசை அடையத் தகுதியற்றவர்களாகின்றோம்.

### இலட்சியப் பாதை

ஒருவன் தனது இலட்சியப் பயணத்தை தகுதியுடன் மேற்கொண்டு அதன் இலக்கை அடைய வேண்மானால் அதன் பாதையிலிருந்து சற்றேனும் விலகக் கூடாது.

இலட்சியப் பாதை கரடுமுரடானதாகவும், துன்பங்கள துயரங்கள் நிறைந்ததாகவும் இருப்பது இயல்பானதே. எனவே அந்த இலக்கை அடையும் நோக்கு சறுக்காத வகையில் எவ்விடர் வரினும் எதிர் கொள்ளும் மன உறுதியும் விடாமுயற்சியும் சேர்ந்து பயணிக்கும் இலட்சியப் பயணமே வெற்றி என்னும் சிகரத்தை அடைய வழிசமைக்கும்.

### மன்னிப்பு

இறைவன் மனிதர்கள் மீது பெருமளவு கருணை கூர்ந்து காத்து வருகின்றார். இறைவன் எந்த ஒரு மனித உயிரையும் எடுப்பதற்கு அதிகாரம் வழங்கவில்லை அவர் ஒவ்வொருவனையும் சகோதரத்துடன் நேசிக்கவும் அவர்வர் அல்ல: மனிதன் இறை அரசை தூய்மையுடன் முழுமை பெற்று வந்தடைய வேண்டுமென்றே ஆசிக்கின்றார்.

இதற்காகவே அவனை மீட்பதற்காக தனது மகனை அனுப்பி அவரது உயிரைக் கூடத் தியாகமாகத் தந்து மனித பாவங்களைக் கழுவினார்:

### பின்செல்வோம்

இறைமகன் இயேசுக் கிறிஸ்து எம் பாவங்களைக் கழுவ மனு

**ஆ ஜென்சன் றொனால்ட்**

களுக்காக தன் உயிரைக் கூட தியாகம் செய்யவும் தயாராக இருக்க வேண்டுமென்றே கட்டளையிடுகின்றார்.

இன்றைய உலகில் மனித உயிர்களுக்கு மதிப்பற்றுப் போய் எவனும் தான் நினைத்த நேரத்தில் மற்றவனது உயிரை எடுக்கும் கலாசாரமே மேலோங்கி நிற்கின்றது.

மனிதத் தன்மை, ஜீவகாருண்யம், தியாகம் என்பன வற்றை மறந்து கொலை வெறியும், தீய நோக்கமும் தலைக்கேறி சமூக கட்டமைப்புகளையும் ஆன்மீக நெறிகளையும் உடைத் தெறிந்து வாழ்வதனால் இறை அரசை இழக்கும் நிலை தோன்றுகின்றது.

இறைவன் எவனையும் அழிப்பதற்கு சித்தமாக இருக்கிற மகனாக வந்து இறை வார்த்தைகளைப் போதித்து அதன் வழியைக் கைக்கொண்டு நடக்குமாறு வழிகாட்டியுள்ளார்!

தன் சொந்த பந்தங்கள், சொத்து சுகங்கள், பட்டம் பதவிகள், அனைத்தையும் மறந்து இறை சந்நிதானத்தின் சொத்துரிமையை அடைய வேண்டுமென்றே அவர் பாதை காட்டுகின்றார்.

இந்த உலகியல் செல்வங்களும் ஆசாபாசங்களும் இறை சித்தத்தை அடைவதற்கு விரோதமானவையே அவை எம் மனங்களைச் சோதிக்கும் சாத்தான்களாக சஞ்சரித்திருக்கின்றன;

இந்த சாத்தான்களின் பிடியிலிருந்து விடுபட்டு வல்ல தேவன் வாசஸ்தலத்தில் சங்கமமாகிசாந்திபெறுவதே எம் மானிட உயிர்களிற்கு அதி சிறந்த மேன்மையும் மீட்பும் ஆகும்.

### ஆன்மீகத்தின் அவலம்

இன்றைய சமூகத்தின் வளர்ச்சிப் போக்கில் மனிதர்களாகிய நாம் ஆன்மீகத்தை அர்த்தமற்றதாகப் பார்க்க விழைகின்றோம்;

'வாழ்க்கை வாழ்வதற்கே' என்பது உண்மையே ஆனால் அர்த வாழ்க்கை உண்மையான பூரணமான, புனிதமானதாக அமையும் போதே வாழ்வாங்கு வாழப்படுகின்றது.

இறைவனால் படைக்கப்பட்ட மனிதன் மரணமெனும் ஒடுங்கிய வாயிலினூடு இறை அரசை நோக்கி அழைக்கப்படுகின்றான். புது வாழ்வில் புதுப்பொலிவுடன் முடிவில்லாப் பேரின்பத்துடன் வாழ்வதற்கு நாம் இன்றே ஆன்மீக விழுமியங்களை இறை அழைத்தலுக்கு ஏற்றதாக ஆயத்தம் பண்ணவேண்டும்.

அந்த ஆன்மீக ஆயத்த வாழ்வு அர்த்தம்நிறைந்ததாகவும் முழுமையாக வாழப்படுவதாகவும் அமையுமாயின் எந்த இடர்கள் எம்மை சூழ்ந்து எத்துணை துயர்களை ஏற்படுத்தினாலும் எம் இலட்சியப் பயணத்தின் இலக்கு நிச்சயமாக எட்டப்பட்டே தீரும்.

---

சோதிட பலன்

# விஷு புத்தாண்டில் இராசி மாறும் கிரகங்கள்

# தருகின்ற பலன்கள் நல்லவையா? தீயவையா?

(சென்றவாரத் தொடர்ச்சி,)

### கடகராசி (புனர்பூசம் 4. பூசம், ஆயிலியம்)

இந்த இராசியில் பிறந்த அன்பர்களுக்கு வியாழ பகவான் ஜூன், 13 வரை 11ஆம் இடமாகவும் பின்னர் 12 ஆம் இடத்திலும் அமைந்து பலன் தருவார். சனீஸ்வரன் ஏப்பிரல் 11 வரை-10 ஆம்இடம். பின்னர் 11ஆம் இடத்துக்கும் மாற்றலாக்கி பலன் செய்வார். தற்காலத்தில் குருவினால் மிகவும் நல்ல பலன் நடப்பதால் செல்வம் சேரல், பணவிருத்தி, காணிவீடு வாங்குதல் அல்லது சேரும் லாபம, வாகன வசதிகிடைத்தல், பிரயாண வெற்றி, தொழில்உத்தியோக நன்மை, வருமானச் சிறப்பு அமையும். தகப்பனுக்குத்தேகசுகக்குறைவுடன், மனக் குழப்பம் பிரச்சினை ஏற்படும். வேலையாட்கள் சகாயம், உறவினர் உதவி ஆதரவு கிடைக்கும்; புத்திரர் நன்மை உள்ளது சிலருக்குத் தடங்கலாகி வந்த விவாகம் நடக்கும். ஆடம்பர வாழ்வு விசயங்கள் உண்டாகும். வாகனத் தொழில் விருத்தி, அந்நியர், நண்பர் வகை உதவி தோன்றும். காதல் நட்பு நன்மை, குடும்பத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் நிலவும். கல்வி நன்மை, பணவசதிபுத்திரர் பெறுவார்கள். வங்கிச்சேமிப்பு உயர்ந்து தேவைக்கு பணம் கிடைக்கும். சளி, பல், தோள்பக்க ரோகம் சிலருக்கு அமைந்து நீங்கும். சகோதரர்கள்நன்மை அடைவர்.

ஜூன் 13லிருந்து கல்வி விசயம தளம்பலாகி விருப்பம் குறையும் சிலருக்கு அலைச்சல், அதிக செலவினங்கள், ஆடம்பர சிந்தனை, அட்டகாசமான செயல்கள் தோன்றும். குடி, புகைபிடித்தல், போதைப்பாவனை, நண்பர் உல்லாசம் போன்ற விசயங்கள் தோன்றி, அனுபவித்து சில மாதங்களில் கஷ்டமும், நஷ்டமும் சந்திப்பார்கள். கல்வி முயற்சிகள் சீராக அமைந்து விளங்கும். வழக்கு வெற்றி, நோய் தீரல், கடமைப்பாடுகள் தோன்றும். குடும்பத்தகராறு, சகோதரங்கள் மத்தியில் சச்சரவுகள் சில போது தலைதூக்கும். கடன் பிரச்சினை மறைந்துவிடும். உணவு நன்மை, நித்திரை சுகம் பொதுவாக திருப்தியாக இருக்கும். குழந்தை நன்மை பலருக்கு குறைவாக இருக்கும், வங்கி சேமிப்பு, சீட்டு றேஸ்போட்டி பரிசில்கள் நன்மையாக பலன் செய்யும். அலங்காரப் பொருள், மின்சாரவகை வியாபாரம், ஒடியோ, வீடியோ, ரீ.வி, போன்றவற்றால் லாபம் உள்ளது. சிலருக்குத் தொழில் வருமானச் சிறப்பு, தாயாருக்கு நன்மை, சகோதரங்களுக்கு வருமானச் சிறப்பு கிடைக்கும், சுபமங்கள காரியங்கள் குடும்பத்தில் தோன்றும். வெளிநாட்டுப் பயணம் வெற்றியாக உள்ளது.

**சோதிடஞானி சண். மாஸ்டர்**

சனீஸ்வரபகவான் பலன் 2001 ஏப்பிரல், 11 வரை 10 ஆம் இடமாக அமைவதால், பல தொழில் முயற்சிகள், கள்ளவியாபாரம் செய்யும் தொழில் பிரச்சினை, தொழிலைக் கைவிடும் நிலை ஆகியவை தோன்றும். ஓய்வு, மன அமைதி சில சமயம் குழப்பந்தரும், வாகனப் பிரச்சினை, தாயாருக்கு ரோகம் நிலவும். ஏப்பிரல் 12 லிருந்து சனி 11 ஆம் இடத்தில் அமைந்து நன்மைகளைக் குவிப்பார். தொழில் மாற்றம், நன்மை, குறுக்குவழி பண லாபம் வியாபார மேன்மை, வேலையிடங்களில் ஆதரவு. வாகன சுகலாபம் ஏற்படும். காலில் ரோகம், சளி, இருமல் வாய்வு ரோகம் அமைந்து அகலும். குடும்பத்தில் முரண்பாடு, புத்திரர் வகைப் பிரச்சினை சிலபோது பலப் பரீட்சை விசயங்களும நிலவும், அடுத்தவர் தலையீடு சிலபோது குடும்பத்தில் தோன்றி நீங்கும். அவசரச் செயல்கள் ஏற்படும், தவிர்க்க முடியாத செலவுகள் தோன்றிப் பணம் கரைந்து வரும், குழந்தை அதிர்ஷ்டம் குறையும. கல்விமுயற்சியில் தளம்பல் நிலை இருந்து வரும்; 2002 மாசியிலிருந்து நன்மையான மாற்றங்கள் வரவுள்ளன.

### ராகு, கேது பலன்

ஆண்டு முடியும் வரை ராகு 12 லும், கேது 6லும் பின்னர் முறையே 11 லும் 5 லும் இருந்து பலன் கொடுப்பார், ராகுவினால் அமைதிக் குறைவு, மனக் குழப்பம், அந்நியர் தலையீடு, அதிர்ஷ்டம், தொழில் மாற்றம நடக்கும். கேதுவினால் வழக்குவெற்றி, வயிறு, குடல் ரோகம், தொழில் விருத்தி மற்றும் வருமான முயறசிகள் விருத்தி வரவுள்ளன.

### மற்றக் கிரகங்கள் பலன் 2001 புரட்டாதிவரை

குடும்பத்தில் சலனம் கடன் விசயங்களால் முரண்பாடுகள், ஆயுத வகையால் காயம், விழுதல் (ஆடி) வாகன நஷ்டம், தொழில விவசாய முயற்சி, லாபம, கல்விதடங்கல், புத்திரர் பிரச்சினை, கடன், கால் ரோகம், பதவி, பண விருத்தி, பெண்கள் ஆதரவு, வாகன சுகம் சில வேளை குடும்பத்தில் முறுகல் நிலை அமைதல் காதல், நட்பு விசயங்கள் அமைதல், சகோதர உதவு நிலவும். அரச தொழில், இடமாற்றம் ஆன்மீக சிநதனை ஆகியவை அமையும்.

### 2001 ஐப்பசி முதல் 2002 சித்திரை வரை

பணம் பொருள் சேர்தல், கல்வி தேர்வு நன்மை, தொழில் விருத்தி, அலைச்சல் பெண்கள் ஆதரவு, விவசாய லாபங்கள தோன்றும். மதிப்புஉயர்வு, உஷ்ணரோகம் கடன் பிரச்சினை, உறவினர் நன்மை குறைதல், சகோதரர் பிரச்சினை குடல் ரோகம், புத்திரர் சுகக்

[2ஆம் பக்கம் பார்க்க]

# தென்னிலங்கைக்கு வருமாறு மதகுருமார்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள சர்வமதத் தலைவர்களையும் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் வலம்புரி, உதயன் பத்திரிகைகளின் ஆசிரியர்களையும் இம்மாதம் 26ம் திகதி தென்னிலங்கைக்கு வருமாறு இனவிவகார தேசிய ஒருமைப்பாட்டு கனிப்பொருள் மூலவள அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் காமினி சிராவெல அழைப்புவிடுத்துள்ளார்.

இந்த அழைப்பு சம்பந்தமான அறிவித்தல் நேற்று முன்தினம் யாழ் அரச அதிபர் க. சண்முகநாதனுக்கு தொலைநகல் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

வடக்குத் தெற்கில் உள்ள சர்வமதக்குழுவினர்களின் பரிமாற்றத்திட்டத்தின் கீழ் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 26ம் திகதிமுதல் 31ம் திகதிவரை தென்னிலங்கையில் உள்ள புனிதகணக் கஸ்தலங்களுக்கு விஜயம்செய்வதுடன் அவற்றின் பிரமுகர்களுடனான சந்திப்புக்களும் இடம்பெற ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. இச் சந்திப்பின் போது யாழ். குடாநாட்டு மக்களின் அவலங்கள் குறித்து அவர்களுக்கு விளக்கப்படும்.

கடந்தமாதம் தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணம் வந்த சர்வமதக் குழுவினரிடம் வட இலங்கை பத்திரிகையாளர்சங்கம் யாழ்ப்பாணத்தில் சர்வமத குருமார்களையும் பத்திரிகையாளர்களையும் தென்னிலங்கைக்கு அழைக்க நடவடிக்கையெடுக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்திருந்ததமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

## கொழும்பில் சுவரொட்டிகள்

தமிழீழ விடுதலைப்புலிகள் தடை செய்யப்பட்டிருப்பதை எதிர்த்தும் அவர்களின் தடையை நீக்கி பேச்சுவார்த்தையை ஆரம்பிக்குமாறும் கோரி கொழும்பு நகரில் பல இடங்களின் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

சமாதானப்புறாவை தாங்கிய வர்ணநிறச் சுவரொட்டிகளாலேயே இவ்வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இச் சுவரொட்டிகள் கொள்ளுப்பிட்டி, புறக்கோட்டை, கோட்டைப் பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ளன. [வ]

## துணைவேந்தர்...

போது இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரப்பிள்ளை விஞ்ஞானப்பீடாதிபதி பேராசிரியர் குமாரவடிவேல், பேராசிரியர் சிற்றம்பலம் சட்டத்தரணி க.கேசவன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இக்குழுவினர் மாணவன் திவ்வியனின் விடுதலை தொடர்பான சட்டநடவடிக்கைகளை மேற்கொள்வர் என பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை தெரிவித்துள்ளார். [வ]

## முக்கிய வீதிகள்...

முதலாம் குறுக்குத்தெரு, பிரதான வீதி, சான்மணிக் கூட்டுக் கோபுர வீதி, என். எச். எம். அப்துல்காதர் வீதி, உட்பட கொழும்புதுறைமுகம் தொடக்கம் வெள்ளவத்தைப்பாலம் வரையான மேற்குக் கரையோரப்பகுதி ஆகியன உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசங்களுக்குள் கனரக வாகனங்கள் செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. தேவை யேற்படின் அனுமதி பெற்றே வாகனங்களைக் கொண்டு செல்ல முடியும்.

உயர் பாதுகாப்பு வலய வீதிக் கண்காணிப்பு நடவடிக்கைக்கு விசேட அதிகாரங்களுடன் பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை அரசுக்கு எதிராக ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் எதிர்க்கட்சிகள் மேற்கொள்ளவுள்ள ஊர்வலங்கள் எழுச்சிப் போராட்டங்கள் தொடர்பாகவே அரசாங்கம் வீதிமுடக்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கலாமென அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (இ)

# மரணபயம்; பசிக் கொடுமை தாங்க முடியாது இந்தியா வந்தேன்

## தினகரனுக்கு ஈழத் தமிழ்ப் பெண் தெரிவிப்பு

(சென்னை)

சிங்களப் படைகளின் தாக்குதல்களிலிருந்தும், பசிக்கொடுமையிலிருந்தும் தப்புவதற்காகவேதான் இந்தியா வந்ததாக ஈழத் தமிழ்ப் பெண் ஒருவர் தெரிவித்தாரென இந்தியாவிலிருந்து வெளிவரும் தினகரன் செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அகதித் தஞ்சம் கோரிச்சென்ற பெண்மணி ஒருவரே தினகரன் பத்திரிகைக்கு மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

சிங்கள இராணுவத்தினரின் தாக்குதலிலிருந்தும், பசிக்கொடுமை, மற்றுந் தொடர்ச்சியான குண்டுச் சத்தம் ஆகியவற்றிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காகவே தான் இந்தியா வந்ததாகவும், தனது இந்தியப் பயணத்தின்போது தனது ஒன்றரை வயதுக் குழந்தையும் கடந்த இரு நாட்களாக உணவு, குடி நீர் எதுவுமின்றி கடல் நீரையே குடித்ததாகவும், இந்திய மீனவர்களின் உதவியினாலேயே தாம் இராமேஸ்வரம் வந்ததாகவும் அப்பெண்மணி தெரிவித்ததாக தினகரனில் செய்தி வெளியாகியுள்ளது. (இ)

## முக்கிய...

திஸநாயக்கா, சுற்றுப் புறச் சூழல் அமைச்சர் மகிந்தவிஜய சேகர, பேராசிரியர் அமைச்சர் ஜீ.எல் பீரிஸ், அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபிள்ளை மற்றும் விவசாய அமைச்சர் ஜயரத்தின ஆகியோரின் நடவடிக்கைகளே ஜனாதிபதிக்கு சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும் இவர்களைக் கண்காணிக்கும் படியே ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்காவை அமைச்சர் பதவியிலிருந்து வெளியேற்றப்படலாமென வலம்புரி நேற் செய்தி வெளியிட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. [இ]

## புதிய அரசியல்...

ஜனாதிபதிமுறையை ஒழித்துக்கட்டுவதற்கும் சிறுபான்மை இனத்தின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் உரியவழிவகைகள் காணப்படவேண்டும் என்றும் கூறினார்.

நம்பிக்கை இல்லாத்தீர்மானம் பற்றிக் கருத்துத்தெரிவித்த விக்கிரமபாகு கருணரத்தின நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை சமர்ப்பித்தோர் இரகசியமான அரசியல் தீர்மானங்களை எடுத்திருப்பதாகவும் குற்றம்சாட்டியுள்ளார். [வ]

## பணபலத்தால்...,

சர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது.

சிலநாசகார சக்திகள் அரசுக்கெதிராகக் கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாப்பிரேரணை தோல்வியை தழுவவிருப்பதனால், பணபலத்தின் மூலம் ஜனநாயக முறைப்படி தெரிவுசெய்யப்பட்ட அரசைக்கவிழ்க்கமுயல்கிறார்கள்.

ஜனாதிபதி அரசைக் கவிழ்க்க முயல்கிறார் என்று ஐக்கிய தேசியக் கட்சியினர் பொய்ப்பிரச்சாரம் செய்து வருகிறார்கள். எதிர்வரும் ஒக்டோபர் மாதமளவில் பாராளுமன்றைக் கலைக்கும் அதிகாரத்தை ஜனாதிபதி கொண்டிருந்தும் அரசு மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு விரோதமாக அவர் நடந்துகொள்ளமாட்டார்.

அழிவு நடவடிக்கைகளில் ஈடுபடும் நாசகார சக்திகளுக்கு முகம்கொடுத்து கடந்த ஆறுவருடங்களாக பெரும்பான்மை வாக்குப்பலத்தால் நாட்டை நிர்வகிக்கும் சிறந்த தலைமைத்துவத்தை ஜனாதிபதி சந்திரிகா கொண்டுள்ளார்.

தற்போது நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுகாண்பதற்கு அரசியலமைப்பை திருத்துவதற்கு அரசு முயற்சிசெய்தது என்றும் அமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார். (வ)

## விமான...

பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இருவரும் கொழும்பு கோட்டை பொலிஸ் நிலையத்தில்தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த மோகனதாஸ் கார்த்திகேசு (வயது 34), இரத்தினசிங்கம் இரத்தினரூபன் (வயது-30) ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர். [வ]

## யாழ். ...

நாளும் பகிஷ்கரிப்புப் போராட்டத்தால்யாழ்பல்கலைக் கழக செயற்பாடுகள் அனைத்தும்முற்றாகஸ் தம்பிதமடைந்தது.

நேற்றும் பெருந் திரளான மாணவர்கள். பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடு பட்டதைத் அவதானிக்க முடிந்தது

இதேவேளை மாணவனின் விடுதலை தொடர்பாக ஆராயும் பல்கலைக் கழக கவுன்சில்கூட்டம்உபவேந்தர் பேராசிரியர் பொ, பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாணவன் திவ்வியன் விடுதலை செய்யப்படும் வரை போராட்டம் தொடருமெனவும் பாடசாலைமட்டங்களிலும் இப்போராட்டத்தை விஸ்தரித்து சாகும்வரைஉண்ணாவிரதப் போராட்டமொன்றையும் தாம் ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாகவும் மாணவ பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டது. (இ-6-10)

# மரண அறிவித்தல்

## திருமதி புவனேஸ்வரி சின்னத்தம்பி

(பராசக்தி)

விதானையார் வளவு, குரு வீதி, காங்கேசன்துறையைச்சேர்ந்த திருமதி புவனேஸ்வரி சின்னத்தம்பி அவர்கள் 02-07-2001 திங்கட்கிழமை சிவபதமடைந்தார். அன்னார் சிவபதமடைந்தவிதானையார் ஆறுமுகம்சின்னத்தம்பி அவர்களின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை பொன்னம்மா தம்பதிகளின் அருமை மகளும், சிவகாமசுந்தரி (U K) ஆறுமுகதாசன் (U K) பொன்னம்பலவாணர் (U K) அன்னலட்சுமி (U K) பரமகுருநாதன் [கொழும்பு] ஞானசரஸ்வதி [ஆசிரியை, நடேஸ்வராக் கல்லூரி] [அருணோதயக் கல்லூரி] சக்திவேல் (U. K) விக்கினேஸ்வரன் [U K] சிவானந்தன் (U. K) ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், சிவகுருநாதன் [கனடா] ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பி ப 2-00 மணியளவில் அவரது தற்காலிக வதிவிடமாகிய 'ரைப்பிங் வாசா' அம்பலவாணர் வீதி, உடுவிலில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

'ரைப்பிங் வாசா'
அம்பலவாணர் வீதி,
உடுவில்.

தகவல்:
ஞானசரஸ்வதி (ஞானி மகள்)
சகோதரர்கள்

[3315]


**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
இன்று முதல்
சுப்பர் ஸ்ரார் விஜயசாந்தி
சரத் குமார், வெங்கடேஸ்
நடித்த
**முதலமைச்சர் ஜெயந்தி**
வெண்திரையில்
முதன்முதல்
சுப்பர் ஸ்ரார்
விஜயசாந்தியின் படம்
(ரீலஸ் வெளியீடு)
தினசரி 11-00, 2-30
சனி, ஞாயிறு6-30 மட்டும்
(3264

**ராஜா**
யாழ்ப்பாணம்
லக்கிஸ்டார் அஜித்
(9 வேடங்களில்)
வசுந்தராதாஸ்,
மீனா, நக்மா
மற்றும் பலர் நடித்த
STR பிலிம்ஸ்
**சிட்டிசன்**
தினசரி: 10-30, 2-00
5 00 [பு நே.]
(கி-2125)

**வட கடல் [வரையறுத்தது]**
**NORTH SEA LT'D**

வடகடல் [வ - து] நிறுவனத்தின் மீன்பிடி வலைத் தொழிற்சாலை [முன்னைய சீநோர் நிறுவனம்] விரைவில் உற்பத்தியை ஆரம்பிக்கவுள்ளது. இதற்கான ஊழியர்களை தெரிவு செய்யும் நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ளது.

சீநோர் நிறுவனத்தில் முன்பு கடமை புரிந்த ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட உள்ளதால், அவ்வூழியர்கள் எதிர்வரும் 12-07-2001 வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கும் 12.30 மணிக்கும் இடையில் பிரதிப் பொதுமுகாமையாளரை சந்திக்கும்படி கேட்கப்படுகின்றனர்.

பிரதிப் பொதுமுகாமையாளர்
வடகடல் (வ - து)
வலைத் தொழிற்சாலை,
குருநகர் யாழ்ப்பாணம்.
(கி-2284)

30 ஆண்டு காலமாய் குன்றாத தரம் வாய்ந்த
சுகாதார முறைப்படி உணவிற்கும் வைத்தியர்களுக்கும்
விஷேசமாக தயாரிக்கப்பட்டது.
சுத்தமான
**வி.எஸ்.பி. நல்லெண்ணெய்**
தயாரிப்பாளரும், ஏகவிநியோகஸ்தரும்
**பரிமளா ஸ்ரோர்ஸ்**
26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(கி-1986)


இப்பத்திரிகை "வலம்புரி" அன்கோ ஸ்தாபனத்தாரால் இல 10, வெள்ளாந்தெரு யாழ்ப்பாணம் [illegible] அமைந்துள்ள அச்சகத்தில் 2001ம் ஆண்டு யூலைமாதம் 08-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.